பெப்ரவரி - 2014

திருவள்ளுவர் ஆண்டு 2044

# செந்தமிழ்

தொகுதி : 58
பகுதி : 4

விலை ரூ. 10/-

திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு



சென்னை செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனமும், மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம், செந்தமிழ்க் கல்லூரியும் இணைந்து நடத்தும் சங்கப் பெண் கவிஞர்களின் கருத்துப்புலப்பாட்டு நெறி என்னும் பொருளிலான பத்து நாட்கள் பயிலரங்கின் தொடக்க விழாவினை செந்தமிழ்க் கல்லூரியின் செயலாளர் திருமிகு. கோச்சடை. இரா. குருசாமி அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். உடன் தமிழ்ச்சங்கத்தின் செயலாளர் திருமிகு. இரா. அழகுமலை அவர்கள், செந்தமிழ்க் கல்லூரியின் தலைவர் சு. வீரணசாமி அவர்கள், செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வர் மு. மீனா அவர்கள், கவிஞர் ஆண்டாள் பிரியதர்சினி மற்றும் பேராசிரியர்கள்.

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 58 திங்கள் இதழ்

பகுதி : 4 திருவள்ளுவர் ஆண்டு 2044

பெப்ரவரி 2014




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


ஆசிரியர்

இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ஜெயமோகன் புதினங்களின் மொழி நடை | பெ. இராயதுரை | 4 |
| திருக்குறளின் தோற்றக்களம் அல்லது உரைகாணும் நெறிமுறைகள் | முனைவர் கா. அரங்கசாமி | 9 |
| உலா இலக்கிய வகை வளர்ச்சி | முனைவர் கி. இராசா | 13 |
| பன்மொழிப் புலவர் வெள்ளியம்பலவாண முனிவர் | புலவர் தா. குருசாமி தேசிகர் | 19 |
| களிமண் வாழ்க்கை | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 23 |
| ஒன்பதின் ஒய்யாரம் – சில துணைக் குறிப்புகள் | பேராசிரியர் வெ. பெருமாள்சாமி | 24 |
| மருத நிலமும், மக்கள் வாழ்க்கையும் | பா. மேரி அனிதா | 27 |
| சிவகாமியியின் ஆனந்தாயி – ஒரு சமூகப் பார்வை | ஜெ. இந்திரா | 30 |
| தமிழ்க்கவிதை வரலாற்றில் வள்ளலார் | இ. வீரசக்திவேல் | 37 |

# இதழ் மணம்

அன்புடையீர்,

வணக்கம், நாவலாசிரியர் ஜெயமோகனின் மொழிநடையை விளக்குவதாக ஆய்வாளர் பெ.ராயதுரையின் கட்டுரை சிறப்பாக அமைந்துள்ளது.

சங்கச் சமூகத்தின் சமயம் மற்றும் அறிவுக் கோட்பாட்டடிப்படையில் திருக்குறளின் தோற்றக்களத்தை முனைவர் அரங்கசாமி வெளிக்காட்டியுள்ளார்.

உலா இலக்கிய வகை வளர்ச்சி குறித்த கட்டுரையைப் பேராசிரியர் கி.ராசா அவர்கள் சிறப்புற நிறைவு செய்துள்ளார்.

வெள்ளியம்பலவாண முனிவரின் புலமைத் திறத்தைப் புலவர் குருசாமி தேசிகர் அழகுற எடுத்துக்காட்டியுள்ளார்.

ஒன்பதின் ஒய்யாரம் குறித்த துணைக் குறிப்புகளைப் பேராசிரியர் பெருமாள்சாமி அவர்கள் வெளிப்படுத்தியமை பாராட்டிற்குரியது.

மருதநில மக்களின் வாழ்க்கையை ஆய்வாளர் மேரி அனிதா சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

ஆய்வாளர் இந்திரா, ஆனந்தாயி நாவலைச் சமூகப் பார்வையுடன் விளக்கியுள்ளது பாராட்டிற்கு உரியது.

தமிழ்க் கவிதை வரலாற்றில் வள்ளலாரின் கவித்திறத்தை திரு வீரசக்திவேல் அவர்கள் சிறப்புற படைத்துள்ளார்.

இன்றைய ஆய்வுப் போக்கின் தன்மையை எடுத்துக்காட்டும் கட்டுரைகளைக் கொண்டு திகழ்கிறது இம்மாத இதழ்.

**ஆசிரியர்**

# ஜெயமோகன் புதினங்களின் மொழி நடை

பெ. இராயதுரை
அண்ணாமலை நகர்

## முன்னுரை

இலக்கியப் படைப்பாக்கத்திற்கு அடிப்படையாக அமைவது மொழியாகும். அவ்வாறு அமைகின்ற மொழி நடை பல்வேறு வகைகளில் அமைந்திட வேண்டும். மேலும் படைப்பாளியின் ஆளுமையை வெளிப்படுத்தும் முறையில் அவரது மொழி நடை அமைகின்றது. புதினங்களில் கதை கூறும் திறன் சிறப்புற அமைவதற்குப் பல்வேறு நடைகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு படைப்பாளன் தான் கண்டதை உணர்ந்து சித்தரிப்பதற்கு மொழிநடையைத் துணையாகக் கொள்கிறான். இக்கட்டுரையில் ஜெயமோகன் மொழி நடை குறித்து மொழி நடை விளக்கம், ஆசிரியர் உணர்வும் நடை, வழக்குச் சொற்கள், படி நிலை வழக்குச் சொற்கள், ஒலிக்குறிப்புச் சொற்கள், உவமை ஆகியவை குறித்து ஆராயப்படுகிறது.

## மொழிநடை விளக்கம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் உரைநடை வளர்ச்சியடைந்த காலம் கி.பி. 19 – ஆம் நூற்றாண்டாகும். காலத்திற்கு ஏற்றாற் போல இன்று உரை நடை இலக்கிய வளர்ச்சியின் மூலம் புதினங்களில் மொழி நடை நல்லதொரு வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கிறது.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே" (ந.நூ, 272)

என்ற நன்னூல் நூற்பா மொழியானது காலத்திற்கு ஏற்றாற் போல் மாற்றம் அடைய வேண்டும் என்று கூறுகிறது. அதற்கேற்பச் சங்க இலக்கிய நடை படிப்படியாக மாறி கால மாற்றத்தினால் உரைநடை இலக்கியம் தோன்றி இன்று மொழி நடை படைப்பாசிரியரின் காலம்,

சூழல், பண்பாடு, அறிவியல், சமூகம், சமயம் என்று வட்டாரத்திற்கு ஏற்றவாறு மொழி வளர்ச்சியடைந்துள்ளது.

"நடை" என்பதற்குக் கலைக் களஞ்சியம் "உள்ளத்தின் திட்பம் நடையின் திட்பமாகும். உள்ளத்தின் தெளிவு நடையின் தெளிவாகும். ஆசிரியரின் குழப்பமும் சிக்கலும் அவருடைய நடையிலும் காணப்படும். எனவே ஆசிரியரின் நடையே அவருடைய இயல்பைக் காட்டும் உரைகல் ஆகும். நடை ஆசிரியரின் உள்ளத்தின் சொல்லோவியம்; குணத்தை அறியும் கலை" (ப.ழ.மூ.வீ.தி. ஜானகிராமன் சி.க, ஓர் ஆய்வு) என்று நடை என்பதற்கு விளக்கம் தருகிறது. "மொழியை அறிவது என்பது பண்பாட்டினை அறிவது ஆகும். ஏனெனில் பண்பாட்டுச் சூழ்நிலையின் சூழமைவினை (Context of situation) அது எப்போதும் சார்ந்தே அமைகிறது. பண்பாடு – மொழி – பண்பாடு என்ற உறவினை அல்லது பண்பாடு – மொழி என்ற உறவினைப் பெற்றிருக்கிறது இது. எனவே, மொழி பற்றிய கோட்பாடு, ( மொழியியல் ) பண்பாடு பற்றிய கோட்பாட்டின் ஓர் அங்கமாக விளங்குகிறது " தி.சு. நடராஜன் (திறனாய்வுக் கலை, ப. 104) என்கிறார்.

மொழி என்பது அம்மொழி சார்ந்த பண்பாட்டினை அறியும் களஞ்சியமாக விளங்குகிறது என்று கூறலாம். அறிஞர் மு. வரதராசனார் நடையினைப் பற்றி, "நடை என்பது ஒரு ஆசிரியரின் தனித்தன்மையை வெளிப்படுத்தவல்லது. அவரை இனங்கண்டு கொள்ளும் வகையில் அவருக்கே உரியதாக இருக்கும் வெளிப்பாட்டு மொழிப்பாங்கே இது. ஆகவே இலக்கியத்தில் மிகப்பெரிய சாதனை தெளிவும், இனிமையும் சிறந்த நடையின் இரு பண்புகள்" (மு.வ. இலக்கிய மரபு, ப. 26) என்று குறிப்பிடுகிறார். நம் மனிதனுக்கு இரு கண்கள் தேவையானவை போலத் தெளிவும், இனிமையும் மொழி நடைக்குத் தேவையான பண்புகள் ஆகும்.

ஜெயமோகன், படைப்பாளர்களின் நடைபற்று புனை கதையாளனின் சிறப்பியல்பு எதுவோ அது அவனுடைய நடையில் வெளிப்படும் என்று கூறப்படுவதுண்டு. நடையே படைப்பாளி என்று கூறும் திறனாய்வாளர்களும் உண்டு. பெரும்பாலான படைப்பாளர்களுக்கு அவர்களின் புனைகதையுலகு முழுக்க ஒரே நடையே பயின்று வரும்" (ஜெயமோகன், கமண்டல நதி, ப.55) என்று குறிப்பிடுகின்றார். ஒரு சில ஆசிரியர்கள் தங்கள் படைப்புகள் முழுவதும் ஒரே நடையில் எழுதியிருப்பதைப் பார்க்கிறோம். இந் நடையே படைப்பாளர் நடை என்று இவர் கூறுவதும் ஏற்புடையதாக இன்று இருக்கின்றது.

## ஆசிரியரின் உணர்வும் நடையும்

படைப்பாளர்களின் நடையானது அவர்களுடைய உள் மனதின் இயல்பை ஒட்டி அமைந்திருக்கும். ஆசிரியர்களின் மனதில் உண்மையும் உறுதியும் நிறைந்திருந்தால், அவர்களுடைய மனதில் ஆர்வம் மிகுதியானால் நடையிலும் ஆர்வம் மிகுதியாக இருக்கும். அவர்களுடைய மனதில் இன்ப உணர்வு பெருகினால், நடையில் கவர்ச்சியும் பெருகும். அவர்களுடைய மனதில் துன்பம், கலக்கம், வெறுப்பு ஏற்பட்டால் நடையில் சிக்கலும், தடுமாற்றமும் நிறைந்து விளங்கும் என்று கருதலாம்.

ஒரு படைப்பாசிரியரை அவருடைய மொழிநடையைக் கொண்டு அறியலாம். ஆசிரியரை வேறாகவும் நடையை வேறாகவும் பிரித்துப் பார்ப்பது முடியாத ஒன்று.

## கதைப் போக்கிற்கேற்ப வழக்குச் சொற்கள்

ஜெயமோகன் புதினங்களில் நடப்பியல் தன்மைக்கு ஏற்றாற் போலும் சூழ்நிலைக்கு ஏற்றாற் போலும் பாத்திரங்களின் தன்மைக்கும், உணர்வுக்கும் ஏற்றாற் போலும் மொழி நடையில் வழக்குச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

“பண்டாரம் வாயை மடித்துத் தன்னுள் சிரித்தபடி நல்ல புத்தன் தேனு ஒரு/குப்பி/ வந்து பெட்டது அங்கத்தே மலைத்தேனு மீனாட்சிட்ட சொல்லி மடத்துக்கு குடுத்தனுப்பித்தேன்” (ஏழாம் உலகம், ப.25)

“மேனன் மஜித் நல்லா தைப்பான். அவுல் டெய்லர்ஸ்னு ஒரு கடை நடத்தறான், வசதியா இருக்கிறான்” (பு.இரவு, ப,26)

“மாதவப் பெருமாள் வேய் வண்டி நான் பொயி குளிச்சுப் போட்டு ஒரு நூறு இட்டிலி பிச்சுபோட்டு வாறனே ” (மேலது. ப. 41) என்று கதைப் போக்கிற்கேற்ப புதினங்களில் வழக்குச் சொற்களை ஆசிரியர் ஜெயமோகன் கையாண்டுள்ளார்.

## சமூகப் பழநிலைக்கேற்ப வழக்குச் சொற்கள்

சமுதாயத்தில் மேல்தட்டு மக்கள், கீழ்தட்டு மக்களிடம் பேசுகின்ற பேச்சு வழக்கு மொழி நடையைப் புதின ஆசிரியர் பாத்திரங்களின் பண்புக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் சொற்களை நேர்த்தியாகக் கையாண்டுள்ளார்.

"பொன்னுமுத்து என்று ஆக்ரோகூஷத்தால் நடுங்கிய பின்னால் கூப்பிட்டது. அவர் கைகளும், தலையும் வெடவெடத்தன. பொன்னுமுத்து, அல்பனுக்கு வாழ்வு வந்தால் என்ன ஆகும் என்று காட்டிவிட்டாய், பரவாயில்லை நன்றாக இரு, பிள்ளை குட்டிகளுடன் சவுக்கியமாய் இரு., (ரப்பர். ப.81) நாக்க அடக்கிப் போடு....... ஆ...... பொளந்து போடுவேன் அல்லெங்கி நாய்க்குப் பொறந்த பயலே!.. (மேலது ப.88)

என்னும் பொருளாதாரத்தின் உயர்ந்த வர்க்கத்தினர் கோபம் கொள்ளும் பொழுது பேசும் பேச்சுவழக்கு இந்தப் புதினங்களின் மூலம் சமூக மக்களுக்காகவும் தெள்ளத்தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறார் புதின ஆசிரியர் ஜெயமோகன்.

## ஒலிக்குறிப்புச் சொற்கள்

ஒலிக் குறிப்புச் சொற்களுக்குப் பொருள் இதுதான் என்று கூறமுடியாது, ஆனால் உணர்ந்து கொள்ள முடியும். இவ்வாறு அமையும் சொற்களை ஒலிக்குறிப்புச் சொற்கள் என்றுரைப்பார்கள். நீதிவாணன் ஒலிக்குறிப்புச் சொற்கள் பற்றி "ஒலிக்குறிப்புச் சொற்களை பயன்படுத்துவதும் ஒரு நடையியல் உத்தியாகும். இவை படிக்கின்றவர்களை நிகழ்ச்சி நடந்த இடத்திற்கே அழைத்துச் சென்று சூழலோடு ஒன்ற வைக்கின்றது. படிப்பவர் கதைச் சூழலின் மனத்தை நுகர முடிகின்றது" (நீதிவாணன், நடையியல், ப.123) என்றும் "ஒலிக்குறிப்புச் சொற்களைத் தகுந்த முறையில் பயன்படுத்துவதுன் மூலம் ஓர் ஆசிரியரின் காலத்தையும், சூழலையும் தெளிவாகச் சித்தரிக்க முடியும்" (மேலது ப.43) என்றும் கூறுகிறார்.

"என்ன அம்மா, என்ன அம்மா?., என அவள் நச்சரித்தால், சும்மாவாடி கொன்னுவிடுவேன்" என்றாள் அம்மா, "அவள் மேலும் சிணுங்கியப்படி அழ" (ரப்பர், ப. 97) புதினங்களின் பாத்திரப் படைப்புகளுக்கு ஏற்றவாறு ரப்பர் புதினத்தின் ஒலிக்குறிப்புச் சொற்களை மிகத் தெளிவான ஒலி நயத்துடன் படிப்பவர்களின் மனநிலையைப் புரிந்து கொண்டு அவர்கள் புரியும் வகையில் இந்தப் புதின ஆசிரியர் இடத்திற்கேற்ப பாத்திரத்தின் குண நலன், பண்பு நலன் ஆகியவற்றுக்கு ஏற்றவாறு அமைத்துள்ளார்.

## உவமைகள்

கருத்துகளை ஒப்புமைப்படுத்திக் காட்டுவதற்கு உவமைகள் துணை செய்கின்றன. வினை, பயன், மெய், உரு என்ற நான்கின் அடிப்படையில் தோன்றும் என்று கூறுகின்றார் தொல்காப்பியர்.

"வினை பயன் மெய் உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமைத் தோற்றம்" தொ.சா.ப.212

என்னும் நூற்பா இதனை உணர்த்துகிறது. மு. வரதராசன் உவமையின் சிறப்பினைக் குறித்து "புலவருடைய உள்ளம் ஒன்றை உணரும் போது அதன் தொடர்பான மற்றொன்றும் உணர்கிறது. தொடர்பான மற்றொன்று முன்னைய ஒன்றுக்கு ஒப்பானதாக இருந்தால் அந்த ஒப்புமையிலே அகக்கண் புதிய அழகைக் காணுகிறது. அவ்வாறு ஒப்புமை கண்டு கூறுவதையே உவமை என இலக்கண நூலார் கூறுகிறார்" (இலக்கியத்திறன், ப.229) என்று குறிப்பிடுகிறார்.

"பனிக்கு அப்பால் பாதியான நிலவு ஒளிமிக்க பூ ஒன்று அயனா மரத்தில் பூத்திருப்பது போல" (ஜெ.மோ.புதினம் ப.75) என்றும் "குடிசைக்குப் பின்னாலிருந்து ஒரு குட்டி மிளா வந்து அதன் உடலின் மிடிகளின் நிலவின் ஒளி ஊடுருவ மயிற்களைத் தனித் தனியாக பார்க்க முடிந்தது" (மேலது. ப.75) என்று புதின ஆசிரியர் ஜெயமோகன் தன் உள்ளத்தில் ஏற்பட்ட உவமை நயத்தைப் புதினத்திற்கு அழகு சேர்த்துக் காட்டுவதாகச் சிறப்பாக அமைந்துள்ளது.

## முடிவுரை

மொழிக்கு நடை அவசியம் என்பதை உணரலாம். வழக்குச் சொற்கள், ஒலி பெயர்ப்புச் சொற்கள் மொழி நடையாக, வட்டார மொழியாகப் பயன்படுத்தியுள்ளனர். ஆசிரியரின் தகுதிக்கேற்றவாறு நடை அமையும் என்பதையும் அறிந்து கொள்ளலாம். கதையின் நிலையும் கதைக்கேற்றவாறு மொழி நடையானது பயன்படுத்தப்படும் என்பதையும் ஆசிரியர் வழி தெரிந்து கொள்ளலாம். மொழியின் பயன்பாடு மற்றும் விளக்கம் போன்றவையும் மொழி நடையின் வழி அறிந்து கொள்ள முடிகிறது.

# திருக்குறளின் தோற்றக்களம் அல்லது உரைகாணும் நெறிமுறைகள்

முனைவர் கா. அரங்கசாமி
கோபி

## முன்னுரை

தமிழர் கண்ட சமய உணர்வு என்பது தனிப்பட்ட சிறப்புக்குரியது. சமயம் என்பதன் பொருளே உயிரினை இயக்கும் ஆற்றலும் (சேருதல்) ஒத்திசைந்து கலப்பதாகும். இதனைத் திருமூலரின் திருமந்திரத்தால் அறியலாம். திருமந்திரம் 3000 பாடலும் சேர்ந்து சொல்லும் செய்தி உயிரினை இயக்கும் மூல ஆற்றல் (இயற்கை ஆற்றல்) சிவம், உடலினை இயக்கும் ஆற்றல் சக்தி என்பதாகும். எனவே தான் திருமூலர் " அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலாதார் " என்று கூறினார். பின்னர் பிற்பகுதியில் " அறிவு அறிவாக அறிந்து அன்பு செய்மின் " என்றும் கூறியதை நாம் நினைக்க வேண்டும். உலகத்தில் தோன்றிய சமயங்கள் யாவும் இயற்கை இன்பக் கோட்பாட்டின் அடிப்படையில் தோன்றியவையே. காலப் போக்கில் மக்களின் தாழ்ந்த அறிவால் வணிக மயமாக்கப் பட்டன. எனவே தமிழர் கண்ட சமயம் யாவும் அறிவின் நெறியாம் (சித்தர் நெறியாம்) இதனைத் தொல்காப்பியம், திருக்குறள், சங்க இலக்கியத்தால் அறியலாம், அறிவர் நெறி புறக் கோயில்களையும், புறச் சடங்குகளையும் ஏலாது பகுத்தறிவுடன் செயல் படுவதாகும், ஆனால் சித்தர்கள் ஏற்படுத்திய கோயில்களை இன்றும் நாம் காண்கிறோம். சாதாரண சாமானிய மக்கட்கு, மனநிலை ஒருமை அற்றவர்க்கு அந்நிலையடைய ஓரிடம் வேண்டும் என்பதால் கோயில்கள் அமைக்கப்பட்டன. கோயில்கள் யாவும் உளவியல் செம்மைக்கும், மனநிலை ஓர்மைக்கும் உரியவை என்பதை உணரும் காலமே விடிவு காலமாகும். எனவே திருக்குறளின் தோற்றக்களம் அறியச் சங்கச் சமூகத்தின் சமயத்தையும் அறிவுக் கோட்பாட்டினையும் அறிதல் வேண்டும். அறிவதற்கான அடித்தளச் செய்திகளை இக் கட்டுரை வெளிப்படுத்துகிறது.

## சமயம்-விளக்கம்

சமசுகிருதச் சொல்லான மதம் என்பதும் சமயம் என்ற தமிழ்ச் சொல்லும் முரண்பட்ட கருத்தியல் கொண்டதாகும். சங்கச் சமூகம் இயற்கை இன்ப அடித்தளம் கொண்டது. அங்கு மதவெறி எங்கும் இல்லை. சமயக்

கட்டுப்பாடுகள் ஏதும் இல்லை. இதனை அறிவதற்குத் தொல்காப்பியம், திருக்குறள் ஆகியன போதும்.

## சங்கச் சமயங்கள்

சங்க காலச் சமயங்களைப் பற்றி ஆய்ந்தோர் கீழ்க்கண்ட சமயங்கள் இருந்தன என்பர். அவற்றைப் பட்டியல் இட்டுக் காண்போம்.

1. தொல்காப்பியர் கூறும் சமயம் 2. திருக்குறள் கூறும் அறிவர் நெறி
3. பின்னர் வந்த சித்தர் (அறிவர்) நெறி 4. இயற்கை இன்ப நெறி
5. ஊர்ப்புற வழிபாட்டு நெறி 6. எண்ணியம் 7. ஆசிவகம்
8. ஊழியல் கோட்பாடு 9. அய்யனார் வழிபாடு 10. மெய்யியல் சமயம்
11. ஆசை நீக்கம் வீடுபேறு 12.பிறவிச் சுழற்சி 13. சிவ வழிபாடு
14.சத்தி வழிபாடு 15.வைதிகம் (வடக்கே இருந்து வந்த நெறி)
16. இயல்புக் கோட்பாடு 17. கருமக் கோட்பாடு
18. கபில மதம்–இறை மறுப்புக் கோட்பாடு 19. வேள்வி நெறி
20. வேல் வழிபாடு 21. வேலன் வழிபாடு 22. மாலவன் வழிபாடு
23. வள்ளி வழிபாடு 24. பகலவன் வழிபாடு (சந்திரன் வழிபாடு)

இவ்வாறு வழிபாட்டு நெறிகள் பலவாறாகப் பெருகியதன் காரணம் மக்கள் பலர்; அதனால் வழிபாட்டு முறைகளும் பல்கின. சமய உண்மைகள் பல; சமயங்கடந்த நிலைகள் பலவாகின. இவற்றைப் பற்றிய விரிவான ஆய்வுகள் இங்கு மேற்கொள்ளப்படவில்லை, காரணம் அந்த ஆய்வு எல்லையற்று விரியும் என்பதை யாவரும் அறிவர்.

## தமிழர்தம் அறிவுக் கோட்பாடு

மேலை நாட்டு அறிஞர்கள் (போப், கால்டுவெல். ஆல்பர்ட் சுவைச்சர்) போன்றோர் தமிழ்மக்கள் நிறைந்த அறிவு பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு பெற்றிருந்தால் மட்டுமே திருக்குறள் தோன்றியிருக்க முடியும் என்பார்கள். அதனால் தமிழர் கண்ட அறிவுக் கோட்பாடு பற்றிய செய்திகளில் சில இங்கு விளக்கப்படுகின்றன. உயிர்களின் அறிவு நிலை பற்றிக் கூற வந்த தொல்காப்பியம் பின்வருமாறு கூறும்.

"ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே
இரண்டு அறிவதுவே அதனொடு நாவே

மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே
ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப் படுத்தினரே"

என்று மரபியல் 27ல் குறிப்பிடுகிறார். இதனை அவர்தம் கூற்றாகக் கூறாது பிறர் கூற்றாகக் கூறியதில் இருந்து இந்தக் கருத்தியல்கள் தொல்காப்பியர்க்கு முன்னர் இருந்தன என்பதும் அறியப்படும் செய்தியாம். இவ்வாறு உலகம் மருள் நெறியில் மூழ்கிய காலத்தில் தமிழர்கள் அறிவு நெறி நின்றதை அறிக. மேலும் தொல்காப்பியம், செய்யுளியல் முதல் நூற்பாவில் 34 செய்திகள் பற்றிக் கூறுவதும்,

"ஞாயிறு, திங்கள், அறிவே, நாணே
உடலே, கால், விலங்கே, நாணே
புலம் புறு பொழுதே, புள் ளே, நெஞ்சே
.........................................................
என்புமனார் புலவர்" (செய்யுளியல்)

என்று கூறும் போதும், மேலும்,

"கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற
வடு நீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" (புறத்திணை–27)

என்று கூறும் போதும் நாம் உண்மைகளை அறிய இயலும்.

மற்றும் தொல்லாசான் தம் நூலில், மொழிமரபு, தொகை மரபு, விளி மரபு என்று கூறுவதும், கிளவியாக்கம் முதற் நூற்பாவில் " உயர் திணை என்மனார் மக்கட் சுட்டே " என்ற போதும் வினை இயலில் மெய்யியல் நுட்பம் காட்டுமாறு, " வினை யெனப் படுவது வேற்றுமை கொள்ளாது " என்ற போதும் அவர் கூறும் அறிவுப் புலத்தை அறியலாம். அவ்வாறே திருக்குறள் காலம் அறிதல், வலி அறிதல், அவை அறிதல், நட்பு ஆராய்தல், அறிவுடைமை பற்றிய அதிகாரத்துடன்,

"எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (355)

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (423)

என்றும் கூறிடக் காண்க. இதனால் திருக்குறள் கூறும் அறிவு ஆற்றல் பற்றியும், அறிவு நெறிக் கோட்பாடு பற்றியும் நாம் அறியலாம். இவ்வாறு சங்க காலம் அறிவு நெறியில் சிறந்து விளங்கிய பாங்கினைச் சங்க இலக்கியம் வழியாக நாம் காணலாம். எனவே சங்க காலம் அறிவர் நெறி பற்றியும் , தூய அறிவு நெறி பற்றியும் விளக்கம் பெற்ற காலம் என்பதை நாம் உணரமுடியும்.

## முடிவுரை

தமிழர் கண்ட சமய உண்மைகள் பன்முகப் பாங்குடையன. சாமானியர்தம் இயற்கை வழிபாட்டில் இருந்து மெய்யறிவு வழிபாடும், தவ வழிபாடும் சங்கச் சமூகத்தில் இருந்தன என்பதைப் புறநானூறும், குறிஞ்சிப் பாடலும் கூறும். மேலும் சங்க அக இலக்கியங்கள் பல் வகைப்பட்ட வழிபாடுகளைப் பற்றிப் பேசும். அத்துடன் அறிவர் நெறியாகிய சித்தர் நெறி சீரிடம் பெற்று இருந்ததையும், அதன் ஆதிக்கம் உயர்ந்து இருந்தது பற்றியும் சங்க இலக்கியத்தால் நாம் அறியலாம். ஆய்வுக்கு எல்லை இல்லை என்பதை அறிந்து கொண்டு நாம் ஆய்தல் வேண்டும். எதுவும் முற்ற முடிந்தது இல்லை என்பதையும் நாம் மறத்தல் கூடாது. அறிவர் நெறியும், தமிழ்ச்சமய நெறியும் சீரிடம் பெற்றுச் சிறந்த பாங்கினைச் சங்க இலக்கியத்தால் நாம் அறிந்து மகிழலாம். தொல்காப்பியமும், திருக்குறளும் நமக்கு இச்செய்திகள் பற்றி ஏராளமான உண்மைகளைக் கூறும். எனவே மேலும் உண்மைகளைத் தேடிக் காண்பதும் அறிஞர் தம் கடமை என்று கூறி அமைவோம்.

---

## வாசகர் வாசகம் (1)

கரும்புஇன் சுவைநிகர் விழாச்செய்தி;
கற்கண் டுபோன்ற இதழ்மணப்பா;
தருகஆண் பெண்கல் வியென்குறட்பா
சரபர் கருத்துசொல் சொக்கருரை;
தேன்பிசை தினைமா நேர்கம்பர்
தொடக்கமாய் நீர்வழி மகாபடைப்பு;
வான்தொட நாடுயர் வழிகா.வே.
வகுத்துரைக் கின்ற பாவரிகள்;
வான்மண் தமிழ்நிகர் உயர்வகலம்
வனப்புமுன் ஐம்பொறி வைத்தநலம்;
தேன்நிகர் சங்கபா செவ்வியலின்
சான்றென நிறுவும் சரளவுரை;
வான்புவி கோவினர் உலாவகைகள்
தொடங்கித் தொடரும் இராசவுரை;
தேன்வெலும் இருபா வாழ்த்தினொடு,
பாமலை விருந்துசெந் தமிழ்ப்பொங்கல் !

**புலவர் சி. பாண்டுரங்கன், ஆம்பூர்**

# உலா இலக்கிய வகை வளர்ச்சி

சென்ற இதழ் தொடர்ச்சி....

முனைவர் கி. இராசா
தமிழ்ப் பேராசிரியர் (பணி நிறைவு)

## தலபுராண வகைக்கு வழிவகுத்தல்

பக்தி இலக்கியக் காலத்தில் இயற்கையை இறைவனாகக் கண்டு வழிபடும் உணர்வு மிகுந்திருந்தது. சமயக் குரவர்கள் தலம் தோறும் சென்று அருளிய பதிகங்களால் இதனை அறியலாம். இவ்வ பின்னாளில் தலமுறைகள் எனப் பெயர் பெற்றமை குறிப்பிடத்தக்கது. தேவாரப் பாடல்களைப் பெற்ற தலங்கள் சிறப்புடையவையாகக் கருதப் படுகின்றன.பக்தி இலக்கியக் காலத்தில் இறைவனின் திருத்தலங்கள் பாடல்களைப் பெற்றுச் சிறந்தமை போன்று சிற்றிலக்கியக் காலத்தில் அவை உலா இலக்கியப் பாடல்களைப் பெற்றுச் சிறந்தன. ஏறக்குறைய எல்லாத் தலங்களுக்குமே உலா இலக்கியம் உண்டு எனலாம். இதனால் தலப் பெருமை சொல்வதற்கென்றே உலா இலக்கியம் பாடப்பட்டது எனக் கருதவும் உலாப் பாடற் கூறுகள் இடம் தருகின்றன.

ஏகாம்பரநாதர் உலாவில் உமாதேவியார் காஞ்சியில் இறையடை செய்ய இடம் பார்த்துச் சென்றமை 1 முதல் 27 கண்ணிகள் வரை சொல்லப்பட்டுள்ளன. காஞ்சித் தலத்தின் அற்புதங்கள் 18 முதல் 28 கண்ணிகளில் சொல்லப்பட்டுள்ளன. பார்த்தனோடு போர் புரிந்து வில்லடி பட்டு இறைவன் அருள் புரிந்த வரலாறும், உபமன்யு முனிவர் குடந்தையில் இருந்த போது அவருக்குப் பாற்கடலை அளித்த செயலும், இறைவன் பிள்ளைக்கறி உண்ண வந்த வரலாறும், மயிலை, தில்லை, திருவொற்றியூர், திருமுல்லைவாயில், திருமலக் கொடி நகர், திருப்பாசூர், திருக்காளத்தி, மதுரை, திருக்கழுக்குன்றம், திருவாரூர் முதலிய தலங்களின் பெருமைகளும் ஏகாம்பரநாதர் உலாவில் விரிவாகப் பேசப் பட்டுள்ளன.

திருக்காளத்தி நாதருலாவில் பஞ்சபூதங்களில் காற்றாக இயங்கும் திருத்தலச் சிறப்பு எடுத்துரைக்கப் பட்டுள்ளது. திருப்பூவன நாதருலாவில் பூவனத் திருத்தலத்தின் சிறப்பும், திருப்பணி செய்தவர்கள் பெருமையும் விரிவாகப் பாராட்டப் பட்டுள்ளன. திருவானைக்கா உலாவில் சம்புகேசுரம் எனப்பெயர் பெற்ற திருத்தலத்தின் வரலாறும், காவிரி உருவான வரலாறு,

கோச் செங்கணான் வரலாறு முதலிய திருத்தலத்தோடு தொடர்புடைய திருவிளையாடல்களும், நீலவிண்ணீசர் என்ற மூர்த்தியை இராமதீர்த்தத்திற்கு மேற்பால் இராமன் வழிபட்டமை, சமயக்குரவர் மூவரும் ஆனைக்கா மணலும் சிவலிங்கம் எனக்கருதி இத்தலத்தை மிதிக்காமல் அயலிலிருந்து பாடிச் சென்றமை முதலான தலச்சிறப்புக்களும் விளக்கமுறச் சொல்லப்பட்டுள்ளன. இவை போன்றே திருக்கயிலாய உலா, திருவாரூர் உலா, திருச்சிறுபுலியூர் உலா, திருக்குற்றாலநாதர் உலா, இரத்தினகிரி உலா, குலசை உலா எனும் பல உலாக்களிலும் அவ்வத் தலச்சிறப்புக்களும் ஆங்காங்கே எழுந்தருளியுள்ள இறைவன் சிறப்புக்களும் பேரிடம் பெற்றுள்ளமையைக் காணலாம்.

பக்தி இலக்கியக் காலத்தில் தோன்றிய தலமுறைப் பாடற் பண்புகள் மேற்சுட்டியவாறு சிற்றிலக்கியக் காலத்தில் தலச்சிறப்பை உரைக்கும் உலா இலக்கிய வகைகளாக வளர்ந்தன எனலாம். இவையே பின்னர் தல புராணங்கள் உருவாகவும் வாய்ப்பாக இருந்திருக்க வேண்டும். தலபுராணங்கள் கி.பி.14 ஆம் நூற்றாண்டுக்குப்பின் பல்கிப் பெருகின என்ற கருத்தும் இங்கு நினைக்கத் தக்கது. உலா நூல்களோ கி.பி.9 ஆம் நூற்றாண்டு முதலே பாடப்பட்டு வந்தன. தலச்சிறப்புக்கள் தலபுராணங்களில் விரிவாகக் காணப்படுகின்றன. எல்லாத் தலபுராணங்களும் தமக்கு வடமொழி மூலம் உள்ளதாகக் கூறிக் கொண்டாலும், பாடுபொருள் வளர்ச்சிக்கு உலா நூல்களில் கூறப்படும் தலச்சிறப்புக்கள் பெரிதும் துணை செய்துள்ளன என்பதை உலா நூல்களையும், தலபுராண்ங்களையும் ஒப்பிட்டு நோக்கி அறியலாம்.

## அகப்பொருள் பேரின்பப் பொருளாதல்

பக்தி இலக்கியங்களின் வாயிலாகச் சமய மறுமலர்ச்சியையும், இலக்கிய வளர்ச்சியையும் தொடங்கி வைத்த சமயக் குரவர்கள், தம் பணிக்குப் பண்டைய அகப்பொருள் மரபுகளைத் துணையாகக் கொண்டனர். 'சக்தியை வியந்தது' எனக் குறிப்பிடப்படும் திருவெம்பாவைக்கு 'மலபரிபாகம் பெற்ற உயிர்கள், அஃதற்ற உயிர்களுக்கு அதை உணர்த்துதல்' என்று விளக்கம் தந்துள்ளனர். 'தலைவியைக் கடவுளாகவும், தலைவிக்கு ஏங்கும் தலைவனை ஆன்மாவாகவும் உருவகித்துப் பாடிய அருளியல் நூல்' என்று திருக்கோவையாரைக் குறிப்பிடுவர். இவைபோன்று உலா இலக்கியங்களில் இடம்பெறும் பெண்டிர் அனைவரும் ஆன்மாக்கள் என்றும், உலா வரும் தலைவன் இறைவன் என்றும், இறைவன்பால் ஆன்மாக்கள் காதல் கொண்டன என்றும் உலாவின் பேரின்பப் பொருளை எடுத்துரைப்பர்.

எழுபருவப் பெண்டிருக்கு இயைபாகக் கொள்ளப்படும் ஆன்மாக்களின் இயல்பு வருமாறு;

பேதை ...... அபிலாஷை (தலைவனைக் காண எழும்) விழைவு

பெதும்பை ...... சிந்தனை (கண்ட தலைவனைப் பற்றி எழும்) நினைவு

மங்கை ...... அநுவல் மிகுதி (தலைவனைப் பற்றி எழுந்த) நினைவு

மடந்தை ...... இச்சை (தலைவனை அணைவதில் உறுதியான) ஆசை

அரிவை ...... ருசி (வேறு புலங்களில் செல்லாது) அவ்வாசையின் முதிர்ச்சி

தெரிவை...... பரபக்தி (தலைவனைக் கூடுவதும் விடுவதுமாகிய இவற்றை முறையே இன்பமும் துன்பமுமாக) நினைத்தல்

பேரிளம் பெண் ...... *பரமபக்தி (தலைவனைப் பிரிந்த நிலையில்) முடிதல்*

'ஆன்மாக்களுக்கு ஞானம், பக்தி என்ற இரண்டு பக்கங்கள் உண்டு' எனக் கருதுவோர், தெய்வ மகளிரின் உறுப்பு உருவகங்களைச் சித்தாந்த நூல்கள் பின்வருமாறு மொழிவதாகச் சொல்வர்;

'இத் தெய்வ மகளிர்க்கு ஞான விசாகத்தைக் கூந்தலாகவும், சுத்தியை நெற்றியாகவும், ஞானத்தைக் கண்ணாகவும், ஆனந்தத்தைப் புன்னகையாகவும், அநுராகத்தை அதரமாகவும், பக்தியை முலையாகவும், முற்கூறியவற்றிற்கெல்லாம் காரணமாகிய அநுமூலத்தை இடையாகவும், யோக்யதையை அல்குலாகவும், சொருபானு மூலமான நன்னடத்தையை நடையாகவும் கூறுப ' இவ்வாறு அகப் பொருளுக்கு ஆன்மிகப் பொருள் கூறப்பட்ட வளர்ச்சியை அறியலாம்.

## மரபும் மாற்றமும்

ஆதியுலாவில் எழுபருவப் பெண்டிரின் இயல்புகள் தனித்தனியே சொல்லப்பட்டுள்ளன. இவ்வியல்புகள் பாட்டியல் நூல்களில் தனித்தனியே குறிக்கப்பட்டுள்ளன. ஆயின் நம்பியாண்டார் நம்பி தாம் இயற்றிய ஆளுடைப் பிள்ளையார் திருவுலா மாலையில் எழுபருவப் பெண்டிரின் இயல்பையும் பின்வருமாறு ஒரு சேரக் கூறியுள்ளார்,

"பேரிளம் பெண் ஈறாகப் பேதை முதலாக
வாரிளங் கொங்கை மடரல்லார் – சீர்விளங்கப்
பேணும் சிலம்பும் பிறங் கொளிசேர் ஆரமும்
பூணும் புலம்பப் புறப்பட்டு ..............." – ஆளுடை 116–119

திருக்குற்றால நாதருலாவில் இறைவன் திருவீதி உலாக் காண, மானிடப் பெண்டிர் மட்டுமின்றி தேவ மகளிர், நாக மகளிர், வித்தியாதர மகளிர், நீரரமகளிர், வரை மகளிர் என்போரும் வந்து குழுமியதாகத் திரிகூட ராசப்பக் கவிராயர் பாடியுள்ளார். இதனை ' இவ்வாசிரியர் கொண்ட புதுமுறை ' என்று டாக்டர் உ.வே.சா. குறிப்புரை தந்துள்ளார். இறைவன் திருத்தேரில் உலா வந்ததாகக் குறிப்பிடுவது மரபு. ஆனால் மதுரைச் சொக்கநாதர் உலாவில் ஏழு நாட்களும் ஏழுவகை வாகனங்களில் இறைவன் திருவுலாப் போந்தான் எனப் பாடப்பட்டுள்ளது.

உலாவரும் தலைவனைத் திருவீதியில் கண்டு பெண்டிர் காமுறுவர் எனப் பாடப்படும். ஆனால் தஞ்சைப் பெருவுடையார் உலாவில் சில புதிய அமைப்புகள் காணப் படுகின்றன. ' பேரிளம் பெண் இறைவன் உலாவின் போது தேர்நிலை வரை சென்று திரும்பினாள் ' என்றும், வீதியுலா வந்த பெருவுடையார் மீண்டும் திருக்கோயில் எய்தினார் என்றும் கூறப்படும் செய்திகள் பிற உலா நூல்களில் இல்லை. இவை யாவும் உலா இலக்கிய வகையில் வளர்ச்சியில் காணப்படும் பாடுபொருள் வளர்ச்சிக் கூறுகள் ஆகும்.

பாடுபொருள் வளர்ச்சியை மட்டுமின்றிப் பெயரிடும் மரபிலும் ஏற்பட்ட வளர்ச்சியை உலா இலக்கிய வகையில் காணலாம். ' உலா ' என்ற சொல்லாட்சியை நம்பியாண்டார் நம்பி ( கி.பி.1001- 40 ) தம் நூலுக்குத் 'திருவுலா மாலை ' எனப் பெயரிட்டதன் வாயிலாக நிலை நிறுத்துகிறார். கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய ஆதியுலாவை 'உலாப்புறம்' என்று சேக்கிழார் ( கி.பி. 1045 ) குறிப்பிடுகிறார். உலாவிற்கு இலக்கணம் வகுத்துள்ள முத்து வீரியம் உலாவினைப் 'பவனி' எனக் கூறுகிறது ( மு.வீ.யா.ஒ.14 ). சேயூர் முருகன் உலாவில் ' பவனி நடந்தான் ' என்ற குறிப்பைக் காணலாம். இவ்வாறு உலா, உலாப்புறம், பவனி என்ற பெயர்களை உலா இலக்கிய வகை பெற்றுள்ளதை அறிகிறோம். இவற்றோடு 'உலாமடல் ' என்ற இலக்கிய வகையும் உலா வகையோடு தொடர்புடையதாக அமைந்துள்ளது.

## இருவகை இணைவுகள்

பவனி வரும் தலைவனைக் கண்டு காமம் மிக்குற்ற தலைவி தோழியிடமும், பிறரிடமும் தன் நிலையைச் சொல்லி வருந்துவது 'பவனிக் காதல் ' (மு.வீ.160, சுவாமி 168)எனும் சிற்றிலக்கிய வகையாகும். கனவில் ஒரு பெண்ணைக் கண்டு கலவி இன்பம் நுகர்ந்த ஒருவன் 'அப் பெண்ணின் பொருட்டு மடலூர்வேன் ' என்று உரைப்பது 'உலாமடல்' எனும் இலக்கிய

வகையாகும்.( பிர.மா.15, சி,யா.20, சுவாமி.9 ) ' உலா ', ' மடல் ' எனும் இரு வகைகளின் இணைவை ' உலாமடல் ' வகையில் காணலாம். இலக்கிய வகை வளர்ச்சி நோக்கும் உலாவின் தொடர்ச்சியாக ' பவனிக் காதல் ' வகை அமைந்துள்ளது என்றும், உலா, மடல் இரண்டின் இணைவாக ' உலாமடல்' அமைந்துள்ளது என்றும் கருதலாம்.

## புனைவியல் உரிமையும் உலா வளர்ச்சியும்

உலா இலக்கியங்கள் பாடுபொருட் கூறுகளில் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடும் வளர்நிலையைக் காட்டுகின்றன. இதற்கு இவற்றைப் பாடிய புலவர்களின் புனைவியல் திறம் காரணமாயிற்று எனலாம். ' பெருங்கதை, சீவக சிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய தமிழ்ப் பெருங்காப்பியங்கள், அக் காப்பியத் தலைவர்கள் உலாச் சென்றதாகக் கூறும் பகுதிகளின் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு பிற்காலப் புலவர்கள் தத்தம் கருத்துகளுக் கிடையே பல பாகுபாடுகளுடன் கலிவெண்பாவில் உலா என்ற பெயருடன் தனி நூலாகப் பாடுவாராயினர் ' என உலா வகை வளர்ச்சிக்குப் புலவர்களின் புனைவியல் திறம் துணை செய்தமையை டாக்டர் உ.வே.சா. எடுத்துக் காட்டியுள்ளார்.

## உலா வகையின் இன்றைய வளர்ச்சி

சமூக மாறுதல்கள் இலக்கிய வகைகளின் வளர்ச்சியில் ஏற்படுத்தும் தாக்கத்திற்கும், பாதிப்பிற்கும் உலா இலக்கிய வகை தக்க சான்றாகத் திகழ்வதாகும். புற வகைகளைப் போல் அல்லாது அக இலக்கிய வகைகள் மாந்தர்தம் ஒழுகலாற்றோடு ( கை கோள் ) தொடர்புடையவை. மாறி வரும் காலச் சூழலுக்கேற்ப கைகோள் மரபுகளில் ஏற்படும் மாற்றங்கள் இலக்கியங்களைப் பாதிக்கின்றன. தலைவன் உலா வரும் போது எழுபருவப் பெண்டிர் அவன் மீது காதல் கொண்டனர் என்பது புனைவியலாயினும் மன்னராட்சிக் காலத்தில் பொருத்தமாக இருக்கலாம். பெண்ணுரிமைகள் போற்றப்படும் தற்காலச் சூழலில் உலாவின் கருத்தமைவு பொருந்துவதாக இல்லை.

மன்னர்கட்குப் பாடிய உலா மக்கள் தலைவர்க்குப் பாடிய உலாவாகப் பிற்காலத்தில் வளர்ச்சி பெறாமல் போனது. இருபதாம் நூற்றாண்டுத் தலைவர் நோக்கில் காமராசர் மீது பாடப் பெற்ற 'காமராசர் உலாவில்' இக்கால உணர்வுக்கு ஏற்ப உலாமரபில் மாற்றம் காணப்படுகிறது. 557 கண்ணிகளால் அமைந்துள்ள இந்நூலில் பாட்டுடைத் தலைவரான காமராசர் மகிழ்வுந்து ஒன்றில் உலாவர எழுபருவ மகளிரும் அவர் உலாச்சிறப்பினைக் கண்டு வாழ்த்துவதாகப் பாடுபொருள் அமைந்துள்ளது.

"சினிமா கவிதைப் பொருள்தெரி யாராய்
இனிதாகப் பாடும் எழிலார் – நனிசிறந்த
செல்லு லாயிட் பிளாஸ்டிக் பொம்மை சில வாங்கி
நல்லவிளை யாட்டு நாடுவார்"

என்று பேதைப் பருவத்தாள் பற்றிய குறிப்பு இடம் பெறுகிறது. இவ்வாறே எழுபருவ மகளிரின் இயல்புகள் இக்காலச் சிந்தனையோடு புனையப் பட்டுள்ளன. மகளிர் காமராசரை வாழ்த்துவதாகப் பாடுபொருள் அமைய, வாழ்த்திய மகளிரின் குறைகளைக் கேட்டு அனைவருக்கும் ஏற்ற முறையில் காமராசர் பதிலிறுத்து மகிழ்வுந்தில் உலாச் சென்றதாக நூல் முடிகிறது. காலச் சூழலுக்கேற்பப் பாடு பொருட்கள் மாறுந் தகைமையன என்பதற்கு இவ்வுலா நூல் சான்றாகத் திகழ்கிறது.

## உலா இலக்கிய வளர்நிலைகள்

உலா இலக்கிய மூலக்கூறு தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. தம் காலத்தில் வளர்ந்து நின்ற உலா இலக்கிய மூலக்கூறுகளை அடியொற்றித் தொல்காப்பிய உரையாசிரியர்கள் இதற்கு உரை வகுத்தனர். சங்க இலக்கியம் முதற்கொண்டு வகைமைகளாக வாழ்வு பெற்றிருந்த உலா இலக்கியக் கூறுகள் பக்தி இலக்கியக் காலத்தில் வகையாக வளர்ச்சி பெற்றன. முந்தைய உலா இலக்கியக் கூறுகளைப் பின்புலமாகக் கொண்டு ஆதியுலா மலர்ந்தது. ஆதியுலாவை முன் மாதிரியாகக் கொண்டு உலா இலக்கியக் கூறுகளைப் பன்னிரு பாட்டியல் வகுத்துத் தந்தது. மெய்க் கீர்த்தி, பள்ளியெழுச்சி, தசாங்கம், தலபுராணம் முதலிய சிற்றிலக்கியக் கூறுகளை உலா இலக்கியங்கள் போற்றியும் வளர்த்தும் வந்துள்ளன. பவனி, பவனிக் காதல், உலாமடல் போன்ற சிற்றிலக்கிய வகைகள் உருவாவதற்கு உலா இலக்கிய வகைகள் காரணமாக இருந்தன. சமய மறுமலர்ச்சிக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும் துணை செய்த வகைமைகளை வளர்த்தவற்றுள் கோவையும், உலாவும் குறிப்பிடத்தக்கவை.

தூது இலக்கிய வளர்ச்சியில் சிற்றின்பப் பொருள் பேரின்பப் பொருளாய் வளர்ச்சி பெற்றது; உலா இலக்கிய வளர்ச்சியில் பேரின்பப் பொருள் சிற்றின்பப் பொருளாய் மாற்றம் பெற்றுள்ளது. நடப்பியல் உணர்வும், பெண்ணுரிமையும், வாழ்க்கையழகும், வாழ்க்கையொழுக்கமும் போற்றப்படுகின்ற தற்காலச் சூழலுக்கேற்ப உலாவின் பாடுபொருள் மாற்றம் காண இயலாத நிலையில் இன்று உலா இலக்கிய வகையில் தளர்நிலை காணப்படுகிறது.

# பன்மொழிப் புலவர் வெள்ளியம்பலவாண முனிவர்

புலவர் தா. குருசாமி தேசிகர்

வெள்ளியம்பலவாண முனிவர் குமரகுருபர சுவாமிகளிடம் வடமொழி, தென்மொழி, தெலுங்குமொழி மூன்றிலும் கற்று வல்லவரானார். இந்திமொழியும், அரபுமொழியும் தாமே கற்று அம்மொழியிலும் வல்லவராயினார். தருமபுர ஆதினத்து நாலாவது குருமூர்த்தி மாசிலாமணி தேசிகரிடம் துறவு பெற்று, நெடுநாள் காசியில் வாழ்ந்து, காசித் திருமடம் கண்ட குமரகுருபர அடிகளிடம் அணுகி பெரும் புலமை பெற்றார். இவரது பிறப்பிடம் சிதம்பரம் ஆகும். இவரது காலம் திருமலை நாயக்க மன்னர் வாழ்ந்த 16 ஆம் நூற்றாண்டாகும். இவர் பாடம் சொல்வதில் வல்லவர்.

## சிந்து பூந்துறை வாழ்வு

இவர் வைத்தீஸ்வரன் கோயில், திருவெண்காடு முதலிய தலங்களில் வாழ்ந்து திருப்பணி செய்துள்ளார். இவர் தெற்கே பயணம் செய்து திருச்செந்தூர் தலத்தைத் தரிசித்துக் கொண்டு திருநெல்வேலியில் உள்ள சிந்து பூந்துறை மடத்தில் வாழ்ந்து கொண்டு, பலர்க்கும் உயர்கல்வியைப் போதித்து வந்துள்ளார். சிந்து பூந்துறை மடம் பல்கலைக் கழகம் போல் இயங்கியது. இன்றும் இச்சிந்து பூந்துறை மடம் தருமையாதீனத்துக்குச் சொந்தமாயுள்ளது. அக்காலத்தில் துறைமங்கலம் சிவப்பிரகாச முனிவர், இவரிடம் கற்று ' கற்பனைக் களஞ்சியம் ' என்னும் பெருமை பெற்றார். அப்பொழுது, மதுரையில் திருமலை மன்னர் திருக் கோயில் திருப்பணி செய்து முடித்து சுவாமி கோயில் கோபுரத்திற்கு எதிரே புதுமண்டபம் என்னும் வசந்த மண்டபம் சிற்பச் சிறப்புகளுடன் செய்து கொண்டிருந்தார். அவற்றுள் ஒரு சிற்பம் ஏகபாத மூர்த்தி தூணில் செதுக்கி நாட்ட முற்படும் போது தடை ஏற்பட்டது.

## ஏகபாத மூர்த்தி

மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரர் கோயிலின் கிழக்கு ராஜகோபுரம் அமைந்த கீழச்சித்திரை வீதி பின்புறமாக அமைய, கீழாவணி மூலவீதி முன்புறமாக, முன் வாயிலாக அமைந்த இப்போதுள்ள புதுமண்டபமே நாயக்கர் கட்டிய புது வசந்த மண்டபம். கி.பி. 1628இல் கட்ட ஆரம்பித்து கி.பி.

1635இல் முடிவு பெற்றது. சிவபெருமானின் 25 மாதேசுவர மூர்த்தங்கள், சிற்பமாய் வடித்தவன் சுமந்திர மூர்த்தி ஆசாரி என்பவர். இருபத்து நான்கு நாட்டப் பெற்ற தூண்கள் போக, ஏகபாத மூர்த்தி ஒன்றே நாட்டப்பட வேண்டிய தூண். அந்த ஏகபாத மூர்த்தி என்பது, ஒரு காலுடன் பரமசிவன் இருக்க அவனிடத்தில், பிரம்மா ஒருபுறமும், திருமால் ஒருபுறமும் தொழும் படியாக இருக்கும் சிற்பமாகும்.

## ஆட்சேபம்

அவ்வுருவத்தை வைணவர் கண்டு,பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் மூலம், மன்னரிடம் ஆட்சேபிக்கச் சொல்லி ' ஏகபாத மூர்த்தம் ' அமைந்த தூண் நாட்டப்படாது இருக்க உத்தரவு பெற்றனர். நாயக்கர் சைவ, வைணவ ஆச்சாரியர்களைக் கொண்டு விவரமறிந்த பின்பே தூணை நாட்ட வேண்டும் என்று ஆணை வழங்கிய பின்பு, ஆறு மாதமாக விவாதம் நடந்ததாகத் திருமலை நாயக்கர் சரிதம் கூறுகிறது. சைவ, வைணவ ஆசாரிய பெருமக்களின் வேதாகம விவாதங்கள் முற்றுப் பெற்றன. இனி இந்த ஏகபாத மூர்த்த விவரம் பற்றி, சைவாசாரியர்கள் அருளிச் செயலைத் தக்கவாறு தெரிந்து, தக்கவர்கள் உணர்த்தினால், தூணை அமைப்பதில் ஆட்சேபமில்லை என்று வைணவர் சார்பில் கூறப்பட்டது. மன்னரின் அமைச்சர் நீலகண்ட தீட்சிதர் வெள்ளியம்பல வாணர்க்கு அழைப்பு விடுத்தார்.

## ஆட்சேப நீக்கம்

வெள்ளியம்பல வாணமுனிவர், தன் ஆசாரியரிடம் விடை பெற்று மதுரைத் தலத்துக்கு எழுந்தருளினார். திருக்கோயில் தரிசனம் முடித்த பின்பு, அத்திருக்கோயில் தல ஓதுவார் தாண்டவ ஓதுவார் மூர்த்தியை அழைத்து, திருஞான சம்பந்தர் மதுரையில் திருக்கோயில் வழிபாட்டின் போது பாடிய, திருவிருக்குறள் பதிகத்தை முற்றிலும் ஓதும் படியாகப் பணித்தார். இச்சம்பவம் புதுமண்டபம் ஏகபாத மூர்த்தி நாட்ட வேண்டிய இடத்தில் நிகழ்ந்தது. வைணவ ஆச்சாரியர்களும், பிள்ளைப் பெருமாள் ஐயங்காரும் ஓதுவா மூர்த்தி ஓதுவதைக் கவனித்து வந்தனர்.
ஒன்பதாம் பாடல்,

"அருவனால வாய் மருவினான் தனை
இருவர் ஏத்த நின்று உருவம் ஓங்குமே"

என்ற 'தமிழ்வேதம்' திருஞான சம்பந்தர் அருளியதைக் கேட்ட பின்பு, வைணவப் பெருமக்கள் தங்கள் ஆட்சேபணையை விலக்கிக் கொண்டனர். தூண் பின்பு நாட்டப்பட்டது. அன்பர்கள் சமய வரலாறு படைத்த அத்தூணைத்

தரிசித்து அருள் பெறலாம். சிற்பங்கள் நிறைந்த புதுமண்டபம் கடைகள் நிறைந்து குறைவுபடுகிறது. வெளிநாட்டவர் பலரும் புதுமண்டபம் கண்டு களிக்க கடைகளை நீக்க அரசு முயல வேண்டும் என்று பலமுறை பத்திரிகைகளில் ஆவணப் படுத்தியும், வரலாற்றுப் பதிவுகளிலும் பதிவு செய்துள்ளனர். வெள்ளியம்பல வாண முனிவர் திருக்குறளுக்கு விளக்கமாகக் கதை அமைப்புச் செய்து' முதுமொழிமேல்வைப்பு' என்னும் நூலை வழங்கியுள்ளார். இவரது வழியிலேயே சிவஞான முனிவர் 'சோமேச முதுமொழி வெண்பா' அருளியுள்ளார். இவர் வழியிலேயே கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியனார் 'திருக்குறள் குமரேச வெண்பா' பாடியுள்ளார்.

## கல்விக் கடல்

வெள்ளியம்பல வாண முனிவர் சிவஞான முனிவர் போல மாபாடியம் செய்துள்ளார். உபநிடதம், வேதம்,ஆகமம் முதலிய நூல்களை நன்கு கற்று, மேற்கோள் காட்டுகின்றார். இவரது உரைத்திறனுக்கு ஒரு எடுத்துக்காட்டு,

"நூலின் சொற் சுருக்கத்தால், நூலாசிரியரது
அகத்தை தேர்ந்துணராம்; பொருட் பெருக்கத்தை
நல்கும் பேராற்றல் உடையவரே, உரையாசிரியர்
ஆவார்; நூலாசிரியர் செய்யும் உதவி
பேருணர் வினார்க்கே பயன்படும்; உரை
யாசிரியர் செய்யும் உதவி அப் பேருணர்
வினராக அவாவும், சிற்றுணர் வினார்க்
கெல்லாம் பயன்படும். அவ்வாறு செய்யுந்
திறத்தில் உரையாசிரியர் மிக்க ஆற்றல்
வாய்ந்தவராயிருத்தல் வேண்டும்" (மாபாடியம், பக்கம்.176)

## இரட்டுற மொழிதல்

முனிவர் இரட்டுற மொழிதலில் வல்லவர். ஔவையார் அருளிய 'இல்லறமல்லது நல்லறமன்று' என்பதற்கு முனிவர் கூறும் பொருள் வியப்பைத் தரும்.

"இல்லறம்-இல்லறமும், அல்லது-துறவறமும்
நல்லறம்-நன்மைதரும் அறங்களாகும்; அன்று-
தீமைதரும் அறங்கள் அல்ல"

என்பது முனிவர் கண்ட பொருள்.

## முதுமொழிமேல் வைப்பும் உரையும்

முதுமொழிமேல் வைப்பு இவரது பாடல்,

'ஈசனுமையாளிடப்பட்டு வாரமாய்ப்
பேசலு மாயோன் பெரும்பாம்பாம்-ஆசிந்
கெடுவல் யானென்பதறிக தன் நெஞ்சம்
நடு ஓரீ இயல்ல செயின்'.

இவரது பாடலுக்கு இவரே நல்கும் உரை உணரத்தக்கதாகும்:

'வெற்றிக்குந் தோல்விக்கும் நடுக்கூற நாரணனை வைத்துச் சிவனும் உமையும் சூதாடும் வழி, உமை வென்று, இறை தோற்ற அளவில், உமை சிவனது தோல்வி கூறலும், அவர் நாரணனைக் கேட்டுழிச் 'சிவன் வென்றார்; உமை தோற்றீர்' என நடுவிகந்து கூறினமையின், உமை அரியை மாசுணமாகச் சபித்த அளவில் அக்கணமே, அரி, பெரும் பாம்பாய்ப் பிறந்து, வீழ்ந்தமை சிவபுராணம் கூறுமாற்றானும் உணர்க. கண்டது சொல்லாமையின் அப்பெரும் பாம்பும், குருட்டுப் பாம்பாய் வீழ்ந்ததெனவும் புராணம் கூறும். இது மொழிவதே மேற்கண்ட பாடல். இவ் உரைநடையும் முனிவர் நடையாகும். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சீவக சிந்தாமணி முதலிய நூற்பாடல்கள் இவரது மாபாடியத்தில் மேற்கோளாக மிளிர்கின்றன.

## நினைவாலயம்

வெள்ளியம்பலவாண முனிவர் தருமையாதீனத் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர். அதனால் தம்பிரான் என்றும் அழைக்கப்படுவார். படிக்காசுப் புலவரும் இவரது தோழராவார். இறுதிக் காலத்தைத் தில்லையில் கழித்தார். இவர் தம் மூல குருவாகிய ஞானப்பிரகாசர் பெயரில் சிதம்பரத்தில் அமைத்த குளம் இன்றும் உள்ளது. இவரது சமாதி குளத்தின் மேல் கரையில் உள்ளது. அண்மையில் தருமையாதீனம் சார்பில் அவரது சமாதி திருப்பணி செய்யப்பட்டு நினைவாலயம் அமைத்து பெருமை சேர்க்கப்பட்டுள்ளது. இவரது தோத்திரப்பா,

"திருவாசகந்திகழ் தேவார மற்றுஞ் சிறந்த தமிழ்
அருணூர் சிவாகமம் வேதம் புராணமனைத்து மொன்றாய்
பொருளாம் படியுயர ஞானாந்த வுண்மை புகல்வதற்கு
வருமாம் பரசிவனே வெள்ளியம்பல வாணனென்றே".

# களிமண் வாழ்க்கை

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

உறக்கத்துள் நல்லுறக்கம் எதுதான் என்றால்,
உழைத்த பின்னர் வரும் உறக்கம் என்றே சொல்வேன்!
அறுசுவைவேர் சுவைஉணவும் எதுதான் என்றால்,
அளவில்லாச் சுய உழைப்பால் பெறுவதென்பேன்!
சிறப்புமிகும் எழில் ஆடை எதுதான் என்றால்,
செய்தொழிலின் ஊதியத்தால் அடைவ தென்பேன்!
பறவைகளும் தமதுணவைத் தாமே தேடப்
பாழ்மனிதன் பிறர் உழைப்பில் வாழ்வ தேன்? ஏன்?

இருள்வந்து சூழ்ந்ததென்றே கலக்கம் ஏனோ?
இருட்டினில்தான் விண்மீன்கள் ஒளிரும் வாழ்வில்
வரும்தோல்வி என்பதென்ன? தோளில் தட்டி
வாகைபெற எச்சரித்தே அனுப்பும் ஆசான்!
கருமேக மண்டலத்தின் இடிதான், பெய்யும்
கனமழைக்கே கட்டியமாய் அமையும்; நேரும்
நெருக்கடிகள், சோதனைகள், தடங்கல் எல்லாம்,
நெஞ்சுரத்தை ஊட்டுகின்ற தோழர் என்போம்!

அதோ ஆங்கே ஒருகுயவன் சக்க ரத்தில்
அளவோடு களிமண்ணைக் குழைத்து வைத்தே,
எதோகம்பால் சுழற்றுகிறான்; விந்தை என்ன?
எழிலார்ந்த கலயமொன்று மலர்ந்த தாங்கே!
சதாஈங்கே பூமித்தாய் உன்னைக் கூடத்
தன்மடியில் வைத்தேதான் சுழற்றுகின்றாள்;
இதோஇன்னும் களிமண்ணாய் இருத்தல் நன்றா?
எண்ணிப்பார், எவ்வளவு வெட்கக் கேடு?

# ஒன்பதின் ஒய்யாரம் – சில துணைக் குறிப்புகள்

பேராசிரியர் வெ. பெருமாள்சாமி

ஒன்பதின் பெருமைகளைத் தமிழாரகர் தெ. முருகசாமி அவர்கள் 'ஒன்பதின் ஒய்யாரம்' கட்டுரையில் (நவம்பர் 2013 இதழ்) சொல் வகையாலும், எண் வகையாலும் விவரித்துச் சான்றுகளுடன் விளக்கியுள்ள சிறப்பு பாராட்டுக்குரியது. அதனை முன்னிட்டுக் கிளரும் சில எண்ணங்கள் பதிவாதல் அக்கட்டுரைக் கருத்துகளுக்கு மேலும் அணி சேர்க்கும்.

ஒன்பது கோள்கள் (நவகிரகம்), ஒன்பது மணிகள் (நவரத்தினம்), ஒன்பான் சுவைகள் (நவரசம்). ஒன்பது இரவுகள் (நவராத்திரி) முதலிய கருத்தாக்கங்கள் மற்றும் சொல்லாட்சிகளால் ஒன்பது நம் வாழ்வியலில் ஆழமாக ஒன்றியுள்ளது.

நம் பண்டை வானியலில் உடுக்களின் கணக்கு அசுவினி முதல் இரேவதி ஈறாக 27 (9×3)

சங்க இலக்கியமான குறிஞ்சிப்பாட்டில் கபிலர் 99 வகைப் பூக்களைப் பெயர்கள் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

ஆன்மிக உணர்வில் 1008 புனித எண்ணாகக் கருதப்படுகிறது. சிவபெருமானின் திருப்பெயர்கள் 1008. இலக்குமி சகஸ்ரநாம எண்ணிக்கை 1008. இன்னும் வழிபாட்டு நிலையில் 1008 பால் குடக் காணிக்கை செலுத்துவது அம்மன், முருகன் கோவில்களில் இன்றும் கண்கூடு. சக்தியை 1008 போற்றி மலர்களால் வழிபடுவது ஒரு சிறப்பான பக்தி முறையாகும்.

108 திருமால் திருப்பதிகள் பாடல் பெற்ற வைணவ திவ்விய தலங்களாகும்.

ஒன்பதின் இரு மடங்கான 18 நம்மிடையே பெரு வழக்கு. பதினெண் புராணங்கள், பதினெண் கீழ்க்கணக்கு, மேற்கணக்கு நூல்கள் அறிவோம். மகாபாரதம் 18 பருவங்களைக் கொண்ட இதிகாசம். 18 நாட்கள் நடந்தது மகாபாரதப் போர். 11+7=18 அக்குரோணிப் படையினர் போரிட்டனர்.

இப்படி ஒன்பதைத் தனியாகவும், தன் மடங்குகளில் வரும் எண்களாகவும் போற்றுகிற மரபு நம்மிடையே உண்டு.

இனிக் கணித நிலையில்

12345679 × 9 = 111111111

12345679 × 18 = 222222222

12345679 × 81 = 999999999

என மேற்குறிப்பிட்ட எண்ணை 9 ஆல் பெருக்க ஒன்று ஒன்பது இலக்கங்களிலும் வந்த ஓரெண்ணாகவும், இரு மடங்கான 18 ஆல் பெருக்க ஒன்பது இலக்கங்களிலும் 2 வருகிற எண்ணாகவும், அதே போல் 9 இன் 9 மடங்கான 81 ஆல் பெருக்க ஒன்பது ஒன்பது முறை அடுக்கிய எண்ணாகவும் வந்து ஒய்யாரம் காட்டுவது வியப்பூட்டுகிறது.

(அ)

274685 - (2+7+4+6+8+5)

(-) 32

..........................................................................

274653 = (2+7+4+6+5+3) = 27 = (2+7) = 9

(ஆ)

831149 - (8+3+1+1+4+9)

(-) 26

..........................................................................

831123 = (8+3+1+1+2+3) = (1+8) = 9

எண்ணியல் வியப்புகள் எண்ணில.

இயற்பியலில் ஒன்பதின் பங்கு இல்லாமல் போகுமா? சான்றுக்காக ஒரு சோறு பதம் பார்ப்போம். பனிக்கட்டி (iceberg) தண்ணீரில் மிதக்கும் போது அதன் ஒன்பதில் ஒரு பங்கு (1/9) மட்டும் நீர்ப்பரப்புக்கு மேலே இருக்கும். எஞ்சிய பகுதி அமிழ்ந்திருக்கும்.

அடுத்து, சொல்லளவில் ஒன்று, இரண்டு, மூன்று என்ற வரிசையில் எட்டு கடந்த எண்ணுக்கு ஒரு தனிப் பெயரிடாமல், பத்து என்ற எண்ணுக்கு முந்தைய எண் எனும் பொருள் உள்ளீடாகத் தொன்மை (தொண்டு), பத்து =

தொன்பது = (தி) ஒன்பது = ஒன்பது எனப் பெயர் வழங்கிப் பத்து வரவுள்ளது என்பதை முன் அறிமுகம் செய்வதாக அமைந்துள்ளது எண்ணுதற்குரியது. இன்னும், பத்து வரிசையிலும் எழுபது, எண்பது எனச் சொல்லிவந்து அடுத்து நூறு வருவதை முன்னறிவிப்பதாகத் (த் மறையாமல்) என வழங்குவது நோக்கற்பாலது. அவ்வண்ணமே, எழுநூறு, எண்ணூறு,தொள்ளாயிரம் என ஆயிரப் பெயரில் ஆயிரத்துக்கு முந்தைய நூறிலேயே பயில்வதையும் பார்க்கிறோம்.

நம்முடைய இந்த முன்னறிவிப்பு முறையை உரோமானிய எண்களை எழுதும் தன்மையிலும் காணலாம். VI (6), VII (7), VIII (8) என எண்கள் குறிப்பிடப்பட்டு ஒன்பதை VIIII என்று எழுதாமல் பத்துக்கு (X) ஒன்று முந்தையது அல்லது ஒன்று குறைவு எனும் பொருள்பட பத்துக்கு முன்பாக ஒன்றைக் குறியிட்டு IX (9) என எழுதுவதை ஒப்பிடலாம். அவ்வாறே C என்பது நூறைக் குறிக்கையில், 90 எழுதுவதற்கு ஒரு பத்தினை முன் இட்டு XC எனக் குறிப்பிடுகிறார்கள். அப்படியே,

M = ஆயிரம்

C = நூறு

CM = தொள்ளாயிரம்

என வருவதையும் ஒருங்கெண்ணலாம்.

மேற்கண்டவற்றால் எவ்வியலிலும் எவ்விடத்தும் ஒ்ன்பது சிறப்பிடமே பெறுகிறது எனத் தெளியலாம்.

---

# வாசகர் வாசகம் (2)

## செந்தமிழின் சிறப்பு

செந்தமிழாம் இதழ்முழக்கத் தமிழின் மாண்பு
சிறகடித்துப் பறந்தந்த பெண்மை போற்றும்
சிந்தனையில் சீர்திருத்தக் கருத்தை ஊன்றும்
செம்மையுற வண்ணச்ச ரபரின் வார்ப்பை
தந்தந்த கம்பரின் நல் கவித்து வத்தைத்
தான்வழிய விட்டதுடன் இலக்கி யங்கள்
முந்திடவே வளர்ந்திட்டப் பாங்கைச் சொல்லி
மூளும்ஐம் பூதங்கள் நிலைசொல் லும்மே !

அன்புடன்,
**பாவலர் அறிவரசன்,** திருலோக்கி

# மருத நிலமும், மக்கள் வாழ்க்கையும்

பா. மேரி அனிதா
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்*

சங்க காலம் நான்கு வகையான ஒழுக்க வடிவங்களைக் கொண்ட நான்கு வகையான இயற்கைப் பின்னணியில் அமைந்த நான்கு வகைப்பட்ட திணை நிலைச் சமுதாயங்களின் ஒட்டு மொத்த வாழ்க்கை நடைமுறைகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. மலைப்பகுதி, காட்டுப் பகுதி, வயற் பகுதி, கடற் பகுதி எனும் நானிலங்களை ஆதாரமாகக் கொண்டு வாழ்ந்த நான்கு வகைக் குழுக்களும் அவற்றின் தனித்தன்மைகளும் இணைவும் பற்றியதே சங்க காலச் சமுதாயமாகும். இவற்றுள் வயற்பகுதியான மருத நிலத்தையும், மக்கள் வாழ்க்கையையும் பற்றி இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

## மருத நிலம்

வேளாண்மைக்கு முதன்மையான ஆதாரம் நிலம். உலகில் உயிரினங்கள் தோன்றுவதற்கான இடமாக நிலம் இருப்பதனால்தான் மண்ணைப் பெண்ணாக, தாயாக மதித்துப் போற்றுகின்றனர். அவ்வகையில் உணவுப் பொருட்கள் மிகுதியாக விளையக் கூடியது மருத நிலம். நால்வகை நிலங்களை விட மருத நிலத்தைத்தான் இலக்கியம் மிகுதியாகப் பேசுகின்றது. மருத நிலமானது உணவு உற்பத்திக்கான அடிப்படை ஆதாரமாய் விளங்கியுள்ளது.

வயல்கள் நிறைந்த பகுதியை மருத நிலம் என்பர். வற்றாத நீர் வளமும், நில வளமும் கொண்ட செழிப்பான பகுதி மருத நிலமாகும். இந்நிலப் பகுதிகளைக் கழனி, பழனம், வயல், செறு என்ற பெயர்களால் வழங்குவர். அதனை,

"பழன மங்கை உதிர்ந்த பீலி
கழனி உழவர் சூட்டொடு தொகுக்கும்"

என்ற புறநானூற்றுப் பாடல் அடிகள் எடுத்து இயம்புகின்றன.

நிலத்தின் இன்றியமையாமையைக் கருதியே தொல்காப்பியர் முதற்பொருள் என வகுத்தார். நிலம் அமைந்திருக்கும் சூழலுக்கேற்ப குறிஞ்சி,

முல்லை, பாலை, மருதம், நெய்தல் எனப் பெயர்கள் வழங்கப்பட்டன. இவற்றுள் வேளாண்மைக்கு உரிய மருத நிலச் சிறப்பினைப் புறநானூற்றுப் பாடலும் நற்றிணையும் எடுத்துக் கூறுகின்றன. இதனை,

புள்ளினம் இமிழும் புகழ்சால் விளைவயல்

என்ற அடி மற்றும்,

நீர்உறு செறுவின் நாறுமுடி அழுத்த
நின் நடுநரொடு சேறி ஆயின்

என்ற பாடலடிகள் தெளிவுறுத்துவதைக் காணலாம்.

## மருதநிலச் சமுதாயம்

நால்வகை நிலங்களுள் நாகரிகம் மிக்க வாழ்க்கையினை நல்குவது மருதநில வாழ்வாகும். நிலத்தைப் பயன்படுத்தி நீர் வளத்துடன் உழவைச் சிறப்புற நடத்தி வருவாயைப் பெருக்கி வாழும் வாழ்வே மருதநில வாழ்வாகும். உழவின் உயர்வைக் கூறும் குடும்ப வாழ்வும் இதுவே. வேட்டைத் தொழிலும் கால்நடை வளர்ப்பும் பூகோள வளங்களுக்கு நேரிடையாகக் கட்டுப்பட்டதாகும். இதில் மனித முயற்சி என்பது இவ்வளங்களைப் பயன்படுத்துவதாகும். எனவே, இத்தொழிலைக் கொண்ட சமூக வாழ்வு இடம் பெயர்தலுக்கு உட்பட்டதாகும். ஆனால் மனித மூளை – கருவி உற்பத்தி – மண்வளம் ஆகியவற்றோடு இணைந்து உழவால் உற்பத்தி செய்யும் மருதநில வாழ்க்கை ஓரிடம் விட்டு ஓரிடம் இடம் பெயர்தலுக்கு அவ்வளவாக இடம் தராதது. எனவே இங்குக் குடும்பம் என்பது ஒரு நிலையான நிறுவன அமைப்பாக உருவாகியமைக்கு அனைத்து வாய்ப்புகளும் இருக்கின்றன என்று கூறுவர் ஆய்வறிஞர்.

இக்கூற்றினால் பதி எழுவறியாப் பழங்குடிகள் நிறைந்த நாகரிக வாழ்வு வாழ்ந்த நிலம் மருத நிலம் என்னும் கருத்து பெறப்படுகின்றது. மருத நில மக்கள் உழவுத் தொழிலின் சிறப்பால் பசியறியாத வளத்தை உடையவர்களாகத் திகழ்ந்தனர் எனச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. இதனை,

அமளித் துஞ்சும் அழகுடை நல்இல்

தொல்பசி அறியாத் துளங்கா இருக்கை மல்லல் பேரூர்

எனப் பெரும்பாணாற்றுப்படை செய்யுளடிகளால் அறியலாம்.

## உழவர் தொழில்

மருத நில மக்களின் முதன்மைத் தொழிலாகிய உழவுத் தொழில், எல்லாத் தொழில்களிலும் உயர்ந்தது என இத்தொழிலைப் புலவர்கள் போற்றுவர்.

திருவள்ளுவர்,

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை என்று கூறுவார்.

பலகுடை நிழலும் தம்குடைக்கீழ் காணும் உழவர் பெருமையைப் புறநானூறு,

வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே - என்று சுட்டுகின்றது.

மருதம் வயலும் வயல் சார்ந்த பகுதியுமாக விளங்குவதால், இங்கு வாழ்ந்த மக்கள் ஏரிகள் கிணறுகளிலிருந்து நிலங்களுக்கு நீர் பாய்ச்சினர். நெற்பயிர் செய்வதற்கு முதலில் நிலத்தை உழுதுச் சேறாக்குவர். சேற்றினை நிரவிச் சமப்படுத்துவர். பின்னர் நெல் விதைப்பர். முதன் முதலில் வயலில் உழுவதற்காகப் பூட்டப்படும் ஏர் பொன்னேர் எனப்பட்டது. சேற்றை நிரவி நாற்று நட்டு, களை பறிப்பர். உரிய காலத்தில் நீர் பாய்ச்சி உரமும் இட்டு பயிர் பாதுகாப்பும் செய்வர்.

## திணை நிலப் பெயர்கள்

மருத நிலத்துக்குரிய திணை நிலப் பெயர்களாகக் களமர், உழவர், கடையர், உழத்தியர், கடைசியர் என்பன வழங்கப்படுகின்றன. உரிப் பொருட்குரிய தலைமக்கள் பெயர்களாக நச்சினார்க்கினியர் மகிழ்நன், ஊரன், மனையோள் ஆகியோரைக் குறிப்பிடுகின்றார். பண்டைய நாளில் மருத நிலத்தின் இல்லத் தலைவி மனையோள் என்று வழங்கப்பட்டாள். நாளடைவில் இவ்வழக்கம் பிற நிலங்களில் உள்ள குடும்பத் தலைவியர்க்கும் பரவலாயிற்று என அறியலாம். மருத நில வாழ்வு மையப்படுத்தப் பெற்றது. பிற நில வாழ்வுகள் அதை நோக்கி மாற்றி அமைக்கப்பட்டன. சமுதாய வளர்ச்சி வாழ்நிலைகளை இணைத்து சென்றது. இவை மருத நில மக்களின் பரந்த நிலையைக் காட்டுவதாக அமைந்துள்ளது. மனிதக் குழுக்களின் வாழ்வுத் தேவைகள் மருத நிலத்தை நோக்கியதாக அமைந்துள்ளன. இதன் காரணமாகவே மருத நிலக் குடும்பங்களுக்குச் சமூகம் தலைமையைத் தந்தது எனலாம். இதனால் சங்கத் திணை நில வாழ்க்கையில் மருத நிலம் செழிப்பில் இருந்தது என்று அறிய முடிகின்றது.

# சிவகாமியின் ஆனந்தாயி – ஒரு சமூகப் பார்வை

ஜெ. இந்திரா
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

பெண்களின் முன்னேற்றத்திற்கும், சுதந்திரத்திற்கும் நம் நாட்டில் பல தலைவர்கள் குரல் கொடுத்துள்ளனர். எத்தனையோ வகையில் பாடுபட்டு உள்ளனர். தங்களின் எழுத்துக்கள் மூலம் கவிதை, நாடகம், பேச்சு எனப் பல நிலைகளில் தங்களின் எண்ணங்களை வெளிப்படுத்தியுள்ளனர். அவற்றால் ஓரளவே நம் நாட்டில் பெண் சுதந்திரம் கிடைத்துள்ளது. அப்படியான சுதந்திரமும், தன்னிச்சையாக முடிவெடுக்கும் ஆற்றலும் பெரும்பாலும் படித்த கல்வியறிவு உடைய பெண்களிடமும், பொருளாதார அமைப்பில் வலுவான நிலையில் உள்ள குடும்பப் பின்னணி கொண்ட பெண்களிடமும் மட்டுமே காணக்கூடிய நிலையில் உள்ளது. பெண் சுதந்திரத் தன்மை என்பதோடு ஆண் ஆதிக்கம் என்பது நம் நாட்டில் அதிகமாகவே உள்ளது. ஆதிக்கத்தின் கீழ்தான் தன் குடும்பம் செயல்பட வேண்டும் என்ற எண்ணம் பெரும்பாலான ஆண்களிடம் இருக்கத்தான் செய்கிறது. அவ்வாறு தன் கருத்திற்கிணங்கி அல்லது குடும்பத்தில் மாற்றம் ஏற்பட்டால் தன் மனைவியை அடி, உதை என்று கொடுமைப்படுத்தும் ஆண்கள், இப்படி பல நிலைகளில் பெரும்பாலான கிராமத்துச் சூழலில் தாழ்த்தப்பட்ட மக்களிடத்தே நடைபெறும் சமூக அவலங்களையும், கொடுமைகளையும் பற்றி 'ஆனந்தாயி' என்னும் நாவலின் ஆசிரியை சிவகாமி தன் எண்ணங்களைச் சமூக அக்கறையுடன் பதிவுசெய்து இருக்கிறார். அவ்வாறான செய்திகளை வெளிப்படுத்துவதாகவே இக்கட்டுரை அமைகிறது.

ஆனந்தாயி என்னும் நாவல் முப்பத்து ஒன்பது அத்தியாயங்களைக் கொண்டும், பல தரப்பட்ட ஆண், பெண் கதாபாத்திரங்களைக் கொண்டும் எழுதப்பட்டுள்ளது. பெரியண்ணன் என்னும் ஆண் கதாபாத்திரம் தலைவனாகவும், ஆனந்தாயி, லெட்சுமி என்னும் இரண்டு பெண்கள் நாவலின் தலைவியாகவும் உருவாக்கப்பட்டுள்ளார்கள். இந்நாவலில் எழுத்திற்கென்ற தனியானதொரு கற்பனைகளை உருவாக்காமல்

எழுத்துக்களின் மூலம் படம் பிடித்துக்காட்டுகிறார். இதனால் நம்மை நாவலின் கதைக்குள் கரைத்துக் கொள்ள முடிகிறது.

இந்நாவலில் சமூக அக்கறையுடன் சமூகத்தில் நடைபெறும் பல நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டாலும் கீழ்க்காணும் செய்திகள் அழுத்தமாகக் கூறப்பட்டுள்ளன.

**பெண்கல்வி, ஆண் ஆதிக்கம், பெண் கொடுமை, கள்ள மணம், பிள்ளைப் பேறு, முதுமையை (தாயை) மதியாமை, காதல் எதிர்ப்பு, சாதிமத எதிர்ப்பு, கிராமத்துச் சண்டைகள், விழிப்புணர்வின்மை, வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, சடங்கு முறைகள், மூட நம்பிக்கை** என்னும் பல செய்திகளை ஆசிரியர் எடுத்தியம்பியுள்ளார். "கல்வியில்லாப் பெண்கள் களர்நிலம் அங்கு புல் விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைவதில்லை" என்ற வரிகளுக்கிணங்கவே ஆனந்தாயி கல்வியறிவு இல்லாத பெண்ணாக இருந்ததால் அவள் குழந்தைகளைப் பெற்றெடுக்கிறாளே தவிர நல்ல குழந்தைகளைப் பெற்றெடுக்க முடியவில்லை. அதனால் தான் படிப்பறிவு இல்லாமல் வாழ்க்கையில் பல இன்னல்களுக்கு ஆட்படுகிறோமே என்று வருந்தித் தன் குழந்தைகளை ஓரளவு படிக்க வைக்கிறாள். ஆனாலும் கூட அவர்களின் கல்வி வாழ்க்கைக்கு உதவக்கூடிய நிலையில் இல்லை. வெறும் எட்டுப் படிப்பாகவே உள்ளது. ஆரம்பக் கல்வியிலேயே முடிவடைகிறது. இந்நாவலில் வரும் பெண் பாத்திரங்கள் அனைத்தும் கல்வியறிவு இல்லாது வயல்களிலும், வீட்டிலும் கூலி வேலை செய்து பிழைப்பு நடத்தும் நிலையிலேயே உள்ளார்கள். வாழ்க்கை முழுதும் உழைத்து ஓடாய்த் தேயும் மனிதர்கள் உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது என்னும் பழமொழிபோல் எதையும் சம்பாதித்து சேர்த்து வைக்காத நிலையிலும், சின்ன சின்ன விழாவிற்குக் கூட, தேவைகளைப் பூர்த்தி செய்ய கடன் வாங்கும் நிலையில், மற்றவரை எதிர்நோக்கி இருக்கும் நிலையிலுமே உள்ளார்கள். ஆனந்தாயி, லெட்சுமி, அவர்கள் குழந்தைகள் என எவருமே கல்வியறிவு இல்லாததால் சுதந்திரத் தன்மையில்லாமல் அடிமையாய் வாழ்க்கை நடத்துகிறார்கள்.

## ஆண் ஆதிக்கம்

ஆண் ஆதிக்கம் என்பது நாவலின் ஒவ்வோர் அத்தியாயத்திலும்

பிரதிபலிக்கிறது.பெரியண்ணன் காண்ட்ராக்ட் வேலை செய்து ஓரளவு கையில் காசு உள்ளவனாக இருக்கிறான். அந்த தலை கணத்துடனும், தான் ஆண் என்ற கர்வத்துடனும் தன் மனைவியை எதற்கெடுத்தாலும் அடி, உதை என்று கொடுமைப்படுத்துகிறான். எதிர்த்துப் பேசக்கூடாது என்கிறான். தன் மகள் சைக்கிள் ஓட்டியதற்காக அவளை அடித்துத் துன்புறுத்தி அவளைப் பள்ளிக்குச் செல்வதை நிறுத்தி விடுகிறான். தன் மகனும் கூட தன்னை எதிர்த்துப் பேசக்கூடாது என்று நினைப்பதால் இறுதிவரை அவன் செய்யும் தவறுகளைத் தட்டிக்கேட்க யாரும் இல்லாமல் போகிறார்கள்.

## பெண் கொடுமை

பெண் கொடுமை என்பது பல நிலைகளில் சமூகத்தில் பரவிக் கிடக்கின்றது. ஆண்கள் வழியாக நடைபெறும் கொடுமை முதன்மையாக இருக்கிறது. மேலும் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பல நிலைகளில் பெண் கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அவ்வகையில் ஆனந்தாயி தன் கணவனால் கொடுமைப்படுத்தப்படுகிறாள். லெட்சுமி என்பவள் தன்னைச் சமூகம் வேசியாக்கி விட்டது என வருத்தப்படுகிறாள். நகரத்தில் ஒரு விடுதியில் தன் உடம்பை விற்றுப் பெரியண்ணனுடன் வாழ வேண்டிய சூழ்நிலைக்கு உட்படுத்தப்படுகிறாள். ஆனந்தாயி மகள் கணவன் வீட்டில் கொடுமைப்படுத்தப்பட்டு பிறந்த வீட்டிற்கு அடித்து துரத்தப்படுகிறாள். இப்படி பல நிலைகளில் பெண் சமூகக் கொடுமைக்கு ஆட்படுத்தப்படுதலை ஆசிரியர் எடுத்தியம்பியுள்ளார்.

## கள்ள மணம்

சங்க இலக்கியங்கள் களவு மணம், கற்பு மணம் என இருமணம் பற்றி கூறுகிறது. ஆனால் இன்றைய கால கட்டத்தில் பலதார மணம். மறுமணம் என்பதையும் தாண்டி கள்ள மணம் பெருகிவிட்டது. இது பல இடங்களில் பல கதாபாத்திரங்களின் மூலமாக ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். பெரியண்ணன் தனக்கு ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும் -131 என்று ஒழுக்கம் பற்றி வள்ளுவர் கூறுகிறார். ஆனால் ஒழுக்கமற்ற நிலையில் நகரத்தில் வேலை கிடைத்ததால் பல பெண்களுடன் தன் உறவை வைத்துக் கொள்கிறான். பின் லெட்சுமி என்பவளுடன் ஏற்பட்ட

பழக்கத்தினால் அவளை மனைவிபோல் தன் வீட்டிற்கே அழைத்து வந்து குடும்பம் நடத்துகிறான்.ஆனால் அவளோ பெரியண்ணனைப் பிடிக்காததால் ஒரு லாரி ஓட்டுனரிடம் தொடர்பை வளர்த்துக் கொண்டு அவனுடன் ஓடுகிறாள். பின் அழைத்து வரப்படுகிறாள். மீண்டும் அவ்வூர் கங்காணி மகனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு சென்று விடுகிறாள். அவ்வாறே மலர்க்கொடி என்பவளின் கணவனும் அவளைவிட்டு வேறொருத்தியுடன் சென்று விடுகிறான். இப்படி பல வகையில் சமூகத்தில் ஆண், பெண்களிடையே நிலவக்கூடிய கள்ள மணங்களையும், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் பற்றி ஆசிரியர் சமூக அக்கறையுடன் எழுதியுள்ளார்.

## முதுமை நிலை

இன்றைய சூழலில் முதியோர் இல்லம் அதிகமாகவே பெருகிவிட்டது. அதற்குப் பல வகையான காரணங்கள் உள்ளன. இருப்பினும் கிராமத்து சூழலிலும், தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ள முதியோர்களும் எவ்வளவு தான் துன்பமான சூழ்நிலை தன் இல்லங்களில் ஏற்பட்டாலும் அதனை பொறுத்துக் கொண்டு வாழ வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். பெரியண்ணனின் தாய் வயதான நிலையில் இருக்கிறாள். தன் இளமை நினைவுகளையும், தான் வயல்களில் வேலை செய்ததையும், அப்படியான வாழ்க்கை வாழ்ந்த வயல்வெளிகளைத் தன் உடல் நிலையாலும், கண்பார்வை இல்லாததாலும் பார்க்க முடியாத சூழலால் வருத்தப்படுகிறாள். தனக்கு கண் ஆபரேஷன் செய்ய வேண்டும் எனப் பலமுறை தன் மகன், பேரன் எனப் பலரிடம் கூறியும் அவள் இறக்கும் வரை செய்தபாடில்லை. மேலும் பெரியண்ணன் தன்னைப் பெற்றதாய் என்றும் கூட பார்க்காமல் அவளை உதைத்து காலை முறித்து விடுகிறான். தாழ்த்தப்பட்ட சமூகத்தில் மனைவி, தாய், மகள் என அனைவரையும் துன்புறுத்தும் நிலை அதிகமாகவே உள்ளது. அப்படியாக அவள் முதுமையில் மதிக்கப்படாத நடக்க முடியாமல் படுத்த படுக்கையாய் இருந்து இறந்து போகிறாள்.

## கிராமத்துச் சண்டைகள்

தாழ்த்தப்பட்ட சமூகத்தில் கிராமப்புறங்களில் நடைபெறும் வாய்க்கால் சண்டை, வரப்புச் சண்டை, நீர்ப்பாய்ச்சுவதற்கான வாக்குவாதங்கள், விளைச்சலை அழித்தல், ஆடுகள் களவாடப்படுதல், கோர்ட், கேஸ் எனப் பல

நிலைகளில் சண்டைகள் தொடர்ந்து கொலையில் முடியும் சம்பவங்கள் என்று கதைப்போக்கு அமைந்து ஆசிரியர் உண்மைச் சம்பவங்கள் போல் எழுதியுள்ளார்.

## காதல் எதிர்ப்பு

காதல் எதிர்ப்பு என்பது பல காலங்களாக நடைபெற்று வருகிறது. அக்காதல் பொருளாதாரச் சூழல், சாதி, மதம் போன்ற பல காரணங்களால் எதிர்க்கப்படுகிறது. மேலும் குடும்ப கௌரவம் என்ற அந்தஸ்து கருதியும் எதிர்க்கப்படுகின்றது. அவ்வாறே இந்நாவலிலும் தனம் என்பவள் படிக்கும் வயதில் பள்ளிக்குச் செல்லாமல் காதலனுடன் ஊர் சுற்றுகிறாள். தலைமையாசிரியர் கண்டிக்கிறார். இதனால் தனத்தின் தந்தை அவளை அடித்து, உதைத்துத் துன்புறுத்துகிறார். பள்ளிப் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது. வேறொரு பையனுக்கு மணமுடிக்கப்படுகிறது. இப்படியான காதல் எதிர்ப்புகளும் நாவலில் இடம் பெற்றுள்ளன.

## சாதிமத எதிர்ப்பு

சாதி மதங்கள் பற்றிய செய்திகளும் இந்நாவலில் கூறப்பட்டுள்ளன. கிருத்துவ சமயத்தைச் சார்ந்த டானியல் என்னும் பையன் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த பெண்ணை விரும்புகிறான். சாதி மதம் காரணமாக எதிர்க்கப்படுகிறது. இதனால் அப்பையன் தற்கொலை செய்து கொள்கிறான். மேலும் அம்மதம் சார்ந்த குடும்பத்தினர் மதம் பற்றிய பிரச்சாரங்களும் செய்கிறார்கள். சிறுவர்களும் அவ்வாறான கருத்துகளுக்குள் தங்கள் சிந்தனைகளைச் செலுத்துகிறார்கள். இவ்வாறான நிகழ்வுகள் இன்றைய சூழலிலும் சமூகத்தில் நடைபெறுவதை நாவலில் எழுதியுள்ளார்.

## விழிப்புணர்வின்மை

தாழ்த்தப்பட்ட சமூகத்து மக்களிடையே பெரும்பாலும் விழிப்புணர்வு இல்லாத நிலையே காணப்படுகிறது. ஆனந்தாயி மனைவி நிலையில் வேறொருத்தி (லெட்சுமி) வந்த போதும் தன் கணவன் தன்னைவிட்டு, பலபேரிடம் செல்லும் போதும், தன்னைத் துன்பப்படுத்தும் போதும் மௌனமாகவே இருக்கிறாள். தன் உரிமைகளை இழக்கிறோம் என்ற சுய அறிவில்லாமல் இருக்கிறாள். தன் மகன் பாலன் இரத்தசோகையால்

இறந்தபோது அவனது நோய் பற்றிய விழிப்புணர்வும், அதைத் தடுப்பதற்கான மருத்துவச் சிகிச்சை முறைகளையும் அறியாமலேயே இருக்கிறாள். குடும்பக் கட்டுப்பாடு பற்றியும் தெரியாமல், வருடத்திற்கு ஒரு குழந்தை பெற்றுக் கொள்ளும் இயந்திரமாய்ச் செயல்படுகிறாள். தன் பெண்ணிற்குத் திருமணம் செய்து கொடுத்துவிட்டு பின் ஆனந்தாயி கர்ப்பமானபின் கருச்சிதைவு செய்து கொண்டு உடலாலும் / மனதாலும் துன்பத்திற்கு ஆட்படுகிறாள். இப்படியாகப் பல நிலையிலும் விழிப்புணர்வு அற்ற மனிதர்கள் சமூகத்தில் இருப்பதை ஆசிரியர் கதாபாத்திரத்தின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

## வேலையில்லாத் திண்டாட்டம்

இன்றைய கால கட்டத்தில் சமூகத்தில் இருக்கக்கூடிய பெரும் சிக்கல்களுள் ஒன்றாக வேலையில்லாத் திண்டாட்டம் இருந்து வருகிறது. ஆனந்தாயி நாவலில் ஆனந்தாயியின் மகன் வேலைக்காக அலைகிறான். தன் அப்பா பார்த்த காண்ட்ராக்ட் வேலைக்காகப் பல மாதங்கள் போராடியும் அவ்வேலையை வாங்க முடியாமல் கடைசியில் மளிகைக்கடை வைத்து வாழ்க்கை நடத்துகிறான். அவ்வாறே பெரியண்ணனின் நண்பன் மகனும் வேலைக்குப் போராடுகிறான். இறுதிவரை வேலை கிடைக்காமல் வயல்வெளிகளுக்குக் கூலியாளாக வேலை பார்க்கிறான். இவ்வாறு நாவலில் சமூகத்தில் உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தையும் பதிவு செய்துள்ளார்.

## வறுமை

'தோழமையிலும் ஏழ்மை பேசேல்' என்பார்கள். கொடிது கொடிது வறுமை கொடிது அதனினும் கொடிது இளமையில் வறுமை என வறுமையின் கொடுமை பற்றி பல சொல்லாடல்கள் உள்ளன. அப்படியான வறுமையே சமூக அவலத்திற்கு முக்கியக் காரணமாக உள்ளது. ஆனந்தாயி வறுமையால் துன்பமடைகிறாள். அதனால் தன் பேரக் குழந்தைகளுக்கு நெல் சோறு கூட தர முடியாமல், கம்பங்கூழ் செய்து தந்து மனவருத்தம் அடைகிறாள். பூங்காவனம் என்னும் பெண் தன் வறுமையாலும், தன் நோய்வாய்ப்பட்ட தாயைக் காப்பாற்றவும் சிறு வயதிலேயே பள்ளிப்படிப்பை நிறுத்திவிட்டு கூலி வேலைக்குச் சென்று காப்பாற்றுகிறாள். இந்நாவல் முழுவதுமே இடம்பெறக்கூடிய கதாப்பபாத்திரங்கள் தாழ்த்தப்பட்ட, வறுமையுற்ற சமூகத்தை மையமாக வைத்து எழுதப்பட்டிருப்பதால் வறுமையின் உச்ச

நிலையையும் படம் பிடித்துக் காட்டியுள்ளார். நாவலில் வர்ணனைகள், உடல், உடை, ஊர் என அனைத்தும் வறுமையாகவே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

## மூடநம்பிக்கை

மூடநம்பிக்கை என்பது இன்றும் தொடர்ந்து வரும் தொடர் கதையாகத்தான் உள்ளது. ஆனந்தாயி மகன் பாலன் இரத்தசோகையால் இறந்த போது அவனைப் பேய் பிடித்து விட்டது, பேய் அடித்துக் கொன்று விட்டது என்றும் பூசாரி அழைத்து வரப்பட்டு வேப்பிலை அடிக்கிறார்கள். ஐந்தாவது பெண் பிறந்தால் அதிர்ஷ்டம் என்னும் நம்பிக்கையில் பெரியண்ணன் அவளிடம் மட்டும் பாசம் காட்டுகிறான். மேலும் அவளுக்காகச் சாதகம் கணிக்கப்பட்டு சந்தோசப்படுகிறான். அவளால்தான் தான் பணக்காரன் ஆனதாகவும், நிலங்கள் வாங்கியதாகவும் நம்புகிறான். இப்படியாக மூடநம்பிக்கையும் இந்நாவலில் கூறப்பட்டுள்ளது.

## சடங்கு முறைகள்

சமூகத்தில் மேல்தட்டு மக்களிடமும், தாழ்த்தப்பட்ட மக்களிடமும் சடங்கு முறைகள் நடைபெறுகின்றன. அவ்வாறே திருமணங்கள், பூப்புச் சடங்குகள், குழந்தைப்பேறு, ஊர்த்திருவிழாக்கள் எனப் பல நிலைகளில் நடைபெறுகின்ற சடங்கு முறைகளும் இந்நாவலில் இடம் பெற்றுள்ளன.

## முடிவுரை

சமூகத்தில் பலதரப்பட்ட மக்களும் வாழ்கிறார்கள். அவரவர்களின் வாழ்க்கை மேம்பாடு என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. எழுத்தாளர்கள் அவர்களை வெளியுலகிற்கு அடையாளப்படுத்துகிறார்கள். செல்வந்தர்களின் சுகபோக வாழ்க்கைக்குப் பின் உழைக்கும் வர்க்கத்தினரின் வறுமையும், தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலையும், உணர்வுகளும் சமூக அக்கறையுடன் ஆனந்தாயி என்ற நாவலில் ஆசிரியர் சிவகாமி சிறப்பாகப் பதிவு செய்துள்ளார்.

# தமிழ்க்கவிதை வரலாற்றில் வள்ளலார்

இ. வீரசக்திவேல்
மேலைச்சிவபுரி

நீண்ட வரலாற்றுப் பின்புலமுடைய தமிழ்க்கவிதை மரபில் அரசியலும் இணைந்து நிற்கிறது. தன்னரசு காலமாகின் இலக்கிய வளர்ச்சியில் செறிவார்ந்த செழிப்பான போக்கும், வேற்றரசு காலமாகில் படைப்பாக்கத்தில் தொய்வும் ஏற்பட்டுள்ளதை உணர முடிகிறது. ஒரு நாட்டின் இலக்கிய வளர்ச்சியில் பெரும் பங்கெடுத்து நிற்பது அந்நாட்டின் அரசாங்கமாகும். அரசு மொழியைப் புறக்கணிக்கும் போது இலக்கிய ஆக்கங்கள் குறைவதோடு, அம்மொழி பாதுகாப்பற்ற நிலைக்கும் தள்ளப்படுகின்றது. அத்துடன், இலக்கியப் படைப்பாளிகளின் வாழ்க்கை பெருத்த அவலத்தையும் சந்திக்கிறது. ஒரு நாட்டில், வேறு ஒரு நாட்டு அரசு ஆட்சி செய்யும் போது சுதேசி நாட்டின் இலக்கியச் சாயல், பண்பாட்டுச் சாயல், வழிபாட்டுச் சாயல் என அனைத்தும் மாறிவிடுவது இயல்பு. இத்தகைய ஒரு நிலையைத் தமிழ்ச்சமூகம் சந்தித்தது. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை தமிழகம் வலுவாக மாலிக்காப்பூர், விஜயநகரப் பேரரசு, தெலுங்கர், மராட்டியர், ஐரோப்பியர் என்ற வரிசையில் அயலவர்களின் பிடியில் சிக்குண்டு கிடந்தது. இவர்கள் தங்களின் தாய்மொழியைப் போற்றிய நிலையில் தமிழ்ப் புலவர்கள் ஆதரிப்பாரற்று இருந்தனர்.

செறிவான- முதிர்ந்த சொற்களைக் கொண்டு, உயர்ந்த கற்பனையுடன் படைக்கப்பட்ட தமிழ் இலக்கிய மரபானது வயிற்றுப் பிழைப்புக்காகச் சிற்றிலக்கியங்கள், தனிப் பாடல்கள், சிலேடைப் பாக்கள், போற்றிப் பாடல்கள், சீட்டுக்கவிகள் எனப் பாடும் நிலைக்குக் குறுகிப்போனது. இந்தப் போக்கானது 19 ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது. இது பற்றி பிரேமா நந்தக்குமார், "கம்பருக்குப்பின் பல புலவர்கள் நூற்றாண்டுதோறும் தோன்றினர். ஆனால், ஒருவரும் கம்பனது மேன்மையைப் பெறவில்லை. சிறுபாடல்களும், தனிச் செய்யுள்களும் சிறப்பாக இயற்றப்பட்டன. ஆனால், நீள் கவிதைகள் இலக்கணச் சிக்கல்களிலும், தேய்ந்துபோன உவமைகளிலும் புதைந்து போயின. சிந்தாமணி, இராமாவதாரம் இரண்டையும் ஒட்டிக் காப்பியங்கள் இயற்றப்பட்டன. ஆனால் திருத்தக்கத் தேவரின் கம்பீரமோ,

கம்பனின் இனிமையோ அவற்றில் இல்லை. இவ்விரண்டு காப்பியங்கள் போல வேறு எந்தக் கவிதையும் மக்களிடம் செல்வாக்குப் பெறவில்லை. புதுமையான படைப்புகள், சிந்தனையின் சித்து விதைகள் ஏதுமின்றித் தமிழ் இலக்கியம் வழக்கமான பாதையிலேயே கண்ணை மூடியவாறு உழன்றது என்பர்.

இந்தியா - தமிழகத்தை ஆண்ட அயலவர்களில், ஐரோப்பியர்களின் வருகை குறிப்பிடத்தக்க மாற்றங்களை நிகழ்த்தியது. கல்வி பரவலாக்கப்பட்டது. கல்வியில் அனைவருக்கும் சமவாய்ப்புக் கொடுக்கப்பட்டது. ஆங்காங்கே பள்ளிகள், கல்லூரிகள் நிறுவப்பட்டன. ஆங்கிலம் அலுவலக மொழியாக இருந்தாலும் வட்டார மொழிகள் பாதுகாக்கப்பட்டன. இலக்கிய ஆக்கத்திற்கான புதிய வடிவங்களும் கிடைத்தன. ஐரோப்பியர்களின் வருகையால் இலக்கியத் துறையில் ஏற்பட்ட மாற்றத்தினை நன்கு புரிந்து கொண்ட வள்ளலார், தமக்கு முன்னர் பின்பற்றப்பட்டு வந்த இலக்கியப் போக்கினை மாற்ற முயன்றார். மக்களின் வாழ்க்கைச் சிக்கல், சுயமரியாதைச் சிந்தனை, மொழியுணர்வு, மனித நேயம், உயிரிரக்க உணர்வு, பெண்ணியச் சிந்தனை முதலியனவற்றை இலக்கியப் பாடுபொருள்களாக்கினார். தனிப்பாடல்கள், அந்தாதி, உலா, பிள்ளைத்தமிழ், தலபுராணம் எனப் பாடிக்கொண்டிருந்த மரபும் வள்ளலாரால் மாறத் தொடங்கியது. பேச்சு வழக்கினைக் கொண்டு கவிதை புனைந்து, பண்டித மரபில் இருந்த கவிதைப் போக்கினைப் பாமர மக்களும் புரிந்து கொள்ளும்படிக்கு மாற்றியமைத்த போக்கும் வள்ளலாரைச் சாரும். இப்படியான மாற்றங்களைப் படைப்புச் சூழலில் உண்டு பண்ணிய வள்ளலாரை மறுமலர்ச்சிக் கவிஞர்களின் முன்னோடி என்று குறிப்பிடலாம்.

20-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பாரதியும் பாரதிதாசனும் இவரிடமிருந்தே கவிதை செய்வதற்கான கூறுகளைப் பெற்றுக் கொண்டனர். அதற்கான தாக்கத்தினையும், சாயலினையும் தங்கள் பாடல்களில் பதிவு செய்தும் உள்ளனர்.

களக்கமுற பொதுநடம்நான் கண்டுகொண்ட தருணம்
கடைச்சிறியேன் உளம்பூத்துக் காய்த்ததொரு காய்தான்
விளக்கமுறப் பழுத்திடுமோ வெம்பி உதிர்ந்திடுமோ
வெம்பாது பழுக்கினும்என் கரத்தில் அகப்படுமோ

கொளக்கருது மலமாயைக் குரங்கு கவர்ந்திடுமோ
குரங்கு கவராதெனது குறிப்பில் அகப்படினும்
துளக்கமற உண்ணுவனோ தொண்டைவிக்கிக் கொளுமோ
ஜோதிதிரு வுளமெதுவோ ஏதுமறிந் திலேனே
(திருவருட்பா - 3380)

என்பது வள்ளலாரின் இறையனுபவ உணர்வைக் காட்டும் தொடர் உருவகப் பாடலாகும். இந்தப் பாடலை அப்படியே உள்வாங்கிக் கொண்ட பாரதி, ஒருசில இடங்களை மட்டும் மாற்றித் தன்னுடைய அனுபவத்திற்கு ஏற்ப தொடர் உருவகப் பாடலாகப் பாடியுள்ளார். பாடல் பின்வருமாறு.

களக்கமுறும் மார்லிநடம் ஆண்டுகொண்ட தருணம்
கடைச்சிறியேன் உளம்பூத்துக் காய்த்ததொரு காய்தான்
விளக்கமுறப் பழுத்திடுமோ வெம்பிவிழுந் திடுமோ
வெம்பாது விழினுமென் றன்கரத்திலகப் படுமோ
வளர்த்தபழம் கர்சானென்ற குரங்குகவர்ந் திடுமோ
மாற்றிங்கன் ஆட்சிசெய்யும் அணில்கடித்து விடுமோ
துளக்கமற யான்பெற்றிங்கு உண்ணுவனோ அல்லால்
தொண்டை விக்குமோ ஏதும் சொல்லறிய தாமோ
(பாரதியார் கவிதை)

இதைப் போன்றே, வள்ளலாரின் திருப்பள்ளி எழுச்சிப் பாடல்கள் பாரதியாரின் பாரதமாதா திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களுக்கு முன்னோட்டமாக இருப்பதையும் பார்க்க முடிகின்றது. பாரதியிடம் காணப்படும் கவிதை எளிமை, கவிதைக்கான பாடுபொருள், சந்தங்கள், இசை நுணுக்கங்கள், உவமைகள், உருவகங்கள், நாட்டுப்புறச் சாயல்கள், வேதாகம, புராண, இதிகாச, புனிதநூல் தத்துவக் கோட்பாடுகள், கருத்துச்செறிவு, புலமை வீச்சு ஆகிய யாவற்றிற்கும் வள்ளலாரே முன்னோடியாகவும் உந்து சக்தியாகவும் இருக்கின்றார்.

தமிழ் இலக்கியத்தின் மற்றோர் ஆளுமையான பாவேந்தரிடமும் வள்ளலாரின் சாயல்களைக் காணலாம். வள்ளலாரை, கவிஞர் நேரடியாகப் போற்றிய இடங்களும், அவரிடமிருந்து பெற்ற கவிதை நுணுக்கங்களும் ஏராளம். இனவுணர்வில்லாது, மொழியுணர்வில்லாது எல்லாம் விதியின் வசம் என்று மூட நம்பிக்கையில் போய்க் கொண்டிருந்த தமிழ்ச் சமூகத்தைத் தட்டியெழுப்பும் முகமாகக் கழைக் கூத்தாடி என்ற தலைப்பின் கீழ்,

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை - 1

RNI Regd. No. 5508/57    February 2014    MA/130/2011-2013
Posted at Madurai BPC on 25th of every month

# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்



( தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது )

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

### சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

*From*
**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI** M.A., M.Phil. on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1,** and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI** M.A., M.Phil.